janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi




புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 ஜனவரி 29 - பிப்ரவரி 04 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 43







மாணவர் பெருமன்ற மாநாட்டை நோக்கி... ப 02



இறங்கு முகத்தில் இந்தியப் பொருளாதாரம்! ப 03



அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட மாநாடுகள் ப 16




# 100 மையங்களில் எழுச்சியுடன் ஏஐடியுசி மறியல்

# தொழிலாளர்கள் போர்க்கோலம்!

## 30,000 பேர் பங்கேற்பு - 15,000 பேர் கைது!






**240 நாட்கள் பணிபுரிந்தால் பணிநிரந்தரம், எந்தத் தொழிலில் பணிபுரிந்தாலும், ரூபாய் 21,000க்கு குறையாத மாத ஊதியம்,**

**EPS 95 மற்றும் நலவாரியங்களில் மாதம் 6000 ரூபாய்க்கு குறையாத ஓய்வூதியம்,**

**நலவாரியப் பதிவுகளை எளிமைப்படுத்தி தாமதம் இல்லாமல் நிதிப்பயன்களை உயர்த்தி வழங்குதல்**

**உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மோடி அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளையும் நான்கு சட்டத் தொகுப்புகளையும் எதிர்த்தும்,**

**2023 ஜனவரி 24ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் 100 மையங்களில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 30,000 தொழிலாளர்கள் பங்கேற்றனர். 15,000 பேர் கைது செய்யப்பட்டனர்.**




செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டு, மாமல்லபுரம் ஆகிய மையங்களிலும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரத்திலும், திருவள்ளூர் மாவட்டத்தில் திருவள்ளூர், ஆவடி, அத்திப்பட்டு ஆகிய மையங்களிலும், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டத் தலைநகர்களிலும், திருவண்ணாமலை மாவட்டம் திருவண்ணாமலை, ஆரணி ஆகிய இடங்களிலும், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம், திண்டிவனத்திலும், கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி, சங்கராபுரத்திலும், கடலூரி மாவட்டம் பன்ருட்டி, சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், திட்டக்குடியிலும், திருவாரூர் மாவட்டம் திருவாரூர், மன்னார்குடி, திருத்துரைப்பூண்டியிலும் தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர், கும்பகோணம், பட்டுக்கோட்டையிலும் அரியலூர், பெரம்பலூர் மாவட்டத் தலைநகர்களிலும், திருச்சி மாவட்டம் திருச்சி, துறையூர், சோமரசம்பேட்டை, மணப்பாறை, லால்குடி, வையம்பட்டி, திருவெறும்பூரிலும், புதுக்கோட்டை மாவட்டம் புதுகோட்டை, அறந்தாங்கியிலும், சிவகங்கை மாவட்டம் சிவகங்கை, காரைக்குடியிலும் ராமநாதபுரம் மாவட்டம் ராமநாதபுரம், பரமக்குடி, ராமேஸ்வரம், கமுதியிலும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, கோவில்பட்டி, எட்டையபுரம், குனியமுத்தூர், விளாத்திகுளம், கயத்தாறு, நாசரேத், திருச்செந்தூரிலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலிலும், திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி, வள்ளியூர், அம்பாசமுத்திரத்திலும், தென்காசி மாவட்டம் தென்காசி, சங்கரங்கோவில், சிவகிரியிலும், விருதுநகர் மாவட்டம் விருதுநகர், ராஜபாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர், சிவகாசி, அருப்புக்கோட்டையிலும், மதுரை மாவட்டம் மதுரை, திருப்பரங்குன்றம், திருமங்கலம், மேலூர், அலங்காநல்லூரிலும்,

தொடர்ச்சி 8ம் பக்கம்



கட்சிக் கடிதம்



# மாணவர் பெருமன்ற மாநாட்டை நோக்கி...



பேரன்புமிக்க தோழர்களே !

**நமது மாணவச் செல்வங்கள் தலைநகர் வடசென்னையில் மாநாடு நடத்துகிறார்கள். விடுதலைப் போராட்ட காலத்தில், காலனி ஆட்சியினருக்கு சிம்ம சொப்பனமாகவும், இளைஞர் உள்ளங்களில் தேசபக்த கனல் மூட்டும் தியாக வேங்கையாகவும் திகழ்ந்த பகத்சிங்கின் எழுச்சி வாரிசுகளாக அணிதிரள்கிறார்கள்.**

**பன்னாட்டு நிதி மூலதன சக்திகளின் ஆதரவோடு, ஒன்றிய அரசு அதிகாரத்தை மாணவ சமுதாயம் எதிர்கொண்டு வரும் நிகழ்கால பிரச்சினைகள், இருள் சூழ்ந்து கும்மிருட்டு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் எதிர்காலம் குறித்தும் விவாதிக்க, வரும் பிப்ரவரி 5, 6, மற்றும் 7 ஆகிய தேதிகளில் மாநில மாநாடு நடத்துகிறார்கள்.**

உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறித்து, சமூக செல்வத்தை வழிவழியாக அபகரித்துக் கொள்ள, நான்கு வருணக் கொள்கை வகுக்கப்பட்டது. இது ‘கடவுளின் “படைப்பு என கற்பிக்கப்பட்டு, அதனை பிற்படு “தர்மம்” என நம்பவைக்கப்பட்டது. இதன் வழியாக உழைக்கும் மக்கள் கற்பது தடைசெய்யப்பட்டு “அறிவு” வட்டத்திற்குள் வராமல் தடுக்கப்பட்டனர். இவர்களை வேத நூல்கள் “சூத்திரர்கள்” என்று வகைப்படுத்தியுள்ளன.

சமூகத்தின் மேல் அடுக்கில் உள்ள ‘பிராமணர்கள்’ (வேதநூல்கள் படைப்போர், கற்பதும், கற்பிப்பதும் இவர்களது பணியாகும்) சத்திரியர்கள் (வேத சாஸ்திரங்கள் படி, ஆட்சி அதிகாரத்தை வழிநடத்தியோர் மன்னர்கள் – இவர்கள் கற்கலாம் ஆனால் கற்பிப்பது கூடாது.) வைசியர்கள் (சமூக வளர்ச்சியில் உருவான வணிகர்கள் – முதலாளிகள் – இவர்கள் கற்கலாம் ஆனால் கற்பிப்பது கூடாது) இந்த மூன்று பிரிவினருக்கும் “தொண்டூழியம்” செய்வது மட்டுமே “சூத்திரர்கள்” என்ற அடக்கப்பட்ட உழைக்கும் மக்களின் பணியாகும்.

சூத்திரர்கள் (நிகழ்கால புரிதலுக்கு இடைநிலை சாதியினர்) கல்வி கற்க கூடாது, இந்த சமூகத் தடையை மீறி கற்பவர்களின் நாக்கு துண்டாக்க வேண்டும்.

வேத பாடசாலைகளில் கற்பிப்பதை காதால் கேட்டால், அப்படிக் கேட்பவர்கள் காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்ற வேண்டும் என்கிறது “மனு தர்மம்”

சமூகத் தடைகள் தகர்க்கப்பட்டு கல்வி உயர் சாதியினருக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் உரியது என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும் என புரட்சிகரமாக முழங்கியும், கோரிக்கைகளை முன்னெடுத்துப் போராடியும் வருகின்ற மாணவர் அமைப்பின் மாநில மாநாடு கூடுகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நமது தாய் மண்ணை ஆக்கிரமித்து, கொடுங்கோல் ஆட்சி நடத்திய காலத்தில், அன்னியர் ஆட்சி தொடர அனுமதிக்க மாட்டோம், நாட்டிற்கு பூரண விடுதலை வேண்டும் என போர் முரசு கொட்டிய விடுதலைப் போரில், பிறந்த பேரமைப்பு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்.

1936 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் பன்னிரெண்டாம் நாள், உத்திரபிரதேச மாநில தலைநகர் லக்னோவில் முதல் மாநாடு நடைபெற்றது. விடுதலைப் போராட்ட வீரர். முகமது அலி ஜின்னா தலைமையில் நடந்த முதல் மாநாட்டை பண்டிட் ஜவகர்லால் நேரு தொடங்கி வைத்து உரை நிகழ்த்தியுள்ளார்.

1936 ஆகஸ்டு மாதம் உருவான அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் வெள்ளையரின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகத் தீவிரமான போராட்டங்களை நடத்தியது.

உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்கள் என கல்வி நிலையங்கள் அனைத்திலும் மாணவர் பெருமன்றம் கிளைபரப்பி, விழுதுவிட்டு வளர்ந்து வலிமை பெற்றது.

கல்வி உரிமைக்காக மட்டுமின்றி அரசியல் களத்திலும் தீவிரமாக செயல்பட்டனர்.

காலனி ஆட்சி காலத்தில் கல்வி நிலையங்கள் அனைத்தும் தனியாரிடத்தில்தான் இருந்தன. இந்தக் கல்வி நிலையங்களை நடத்தி வந்த பெரும் செல்வந்தர்கள் ஆங்கில அரசாங்கத்திற்கு வெஞ்சாமரம் வீசி வந்தனர்.

மாணவர் பெருமன்றம் நாட்டின் விடுதலையுடன், தனியார்துறை ஆதிக்கத்தில் அடிமைப்பட்டு கிடந்த கல்வியை விடுவிக்கவும் போராடியது.

நாடு முழுவதும் மாணவர்கள் எழுச்சி பெற்று, போராடி வருவதை கண்டு வெள்ளையர் அரசைக் காட்டிலும், கல்வி நிறுவனங்கள் கலக்கமடைந்தன. எங்கே கல்வி வியாபாரத்தில் கிடைத்து வரும் லாபம் பறி போய்விடுமோ என கவலை கொண்டார்கள்.

ஆத்திரமடைந்த அரசு மாணவர்கள் மீதும், மாணவர் மன்ற தலைவர்கள் மீதும் கடும் அடக்குமுறை தாக்குதலை நடத்தினர்.

மாணவர்களுக்கு அபராதம் விதித்தல், இடைநீக்கம் செய்தல், முற்றாக நீக்குதல் என்ற கடுமையான நடவடிக்கைகள் மூலம் மாணவர்களை அடக்கி ஒடுக்கி விட முயற்சித்தனர்.

**பிரிட்டிஷ் அரசாங்கம் மட்டுமல்ல, வரலாற்றில் தனியுடைமை உருவாகி, அதனை காத்துக் கொள்ள அரசு நிர்வாகம் உருவான காலம் முதல் தனியுடைமை அமைப்பை பாதுகாத்துக் கொள்ள காக்கி சீருடை அணிந்த அடியாள் படையும் ஏற்படுத்தப்பட்டது. அது கையில் லத்தியோடும், துப்பாக்கியோடும் கல்வி நிலையங்களை பாதுகாத்து வருகிறது.**

காவல்துறையைப் பயன்படுத்தி, தடியடி, கண்ணீர்புகை வீச்சு, துப்பாக்கிச் சூடு என காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறை தாக்குதலை நடத்தி, அதிகார திமிரை வெளிப்படுத்தி வருகிறது.

இளைய தலைமுறை “ஓடுகின்ற பாம்பை, குதி காலில் மிதிக்கும்” வயதல்லவா? நீ என்ன வேண்டுமானாலும் செய்து பார்.

அபராதம் போடுகின்றாயா? இடைநீக்கம் செய்கின்றாயா? நிரந்தரமாக நீக்குகின்றாயா? குண்டர்களைக் கொண்டு கொடூரமாகத் தாக்குகின்றாயா? காக்கிகளைக் கொண்டு வன்தாக்குதலை தொடுக்கின்றாயா? கண்ணீர் புகைக் கொண்டு போராளிகளை சிதறடிக்க முயல்கின்றாயா? உன் துப்பாக்கிக் குண்டுகளை பெரு மழையென பொழிந்து, எங்கள் மார்புகளை சல்லடையாக துளைக்க விரும்புகின்றாயா? நாட்டுப்பற்றின் உணர்வில் முறுக்கேறிய எங்கள் கரங்களில் கை விலங்கு மாட்டுகிறாயா?

கற்பனைக்கும் எட்டாத சித்திரவதைகளின் கூடாரமாக அமைக்கப்பட்டிருக்கும், சிறைக் கொட்டடிகளில் அடைத்து சித்திரவதை செய்யப் போகின்றாயா?

ஆளும் வர்க்கமே, அதிகாரக் கூட்டமே, உமது அதிகபட்ச சக்திகள் அனைத்தையும் திரட்டி எங்களுடன் மோதப் போகின்றாயா?

அடக்குமுறைகளை எதிர்கொண்டு, அவைகளை முறியடித்து முன்னேறி வந்த வரலாறு எங்கள் மாணவர் இயக்க வரலாறாகும்.

தமிழ்நாட்டின் உயர் கல்வி வரலாற்றில் அண்ணாமலை பல்கலைக் கழகம் புகழார்ந்த வரலாறு கொண்டது.

இங்கு பயின்று வந்த மாணவர்களான தோழர்கள் கே.பாலதண்டாயுதம், ப.மாணிக்கம் போன்றவர்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, ஆகச் சிறந்த தலைவர்களாக உயர்ந்தனர்.

கே.பாலதண்டாயுதமும் அவரது சக மாணவர்களும் நடத்திய போராட்டம் தமிழ்நாடு முழுவதும் எதிரொலித்தது.

போராட்டத்தை கண்டு அஞ்சிய பல்கலைக் கழகம் பாலன், மாணிக்கம் உள்ளிட்ட முன்னணி மாணவர்களை நீக்கி உத்தரவிட்டது.



இந்தச் செய்தியால், நன்கு படிக்க வைத்து, பட்டம் பெற்று, அரசுப் பணியில் சேர்ந்து கை நிறைய பணம் சம்பாதித்து எதிர்கால வாழ்க்கையை அவர்கள் இனிதாய் அமைந்திட வேண்டுமென பெற்றோர்கள் கண்ட கனவு கலைந்து போனது.

கல்வி வளாகத்தில் இருந்து, வெளியே தூக்கி எறியப்பட்ட மாணவர்கள், தாங்கள் தேர்ந்தெடுத்த அரசியல் கொள்கை வழியில், பொதுவாழ்வை மேற்கொண்டு, நாட்டுக்கும், மக்களுக்கும், அவர்கள் தம் பெற்றோர்களுக்கும் பெருமை தேடி தந்துள்ளனர்.

அந்தத் தியாக பாரம்பரியத்தை கொண்டவர்களின் அடுத்தடுத்த தலைமுறையின் தியாகத்தால் உருவெடுத்து நிற்பது தான் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்.

தமிழ்நாட்டில் 1967, 68ம் ஆண்டுகளில் மாணவர் பெருமன்றம் கடுமையான நெருக்கடியைச் சந்தித்தது.

தொடர்ச்சி 4ம் பக்கம்



த.லெனின்

# இறங்கு முகத்தில் இந்தியப் பொருளாதாரம்!

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்
– குறள்**

**பொருளின் அளவறிந்து வாழாதான் வாழ்க்கை முதலில் வளம் இருப்பதுபோல் தோன்றி பின்பு இல்லாமல் கரைந்துவிடும் என்கிறது குறள். இது வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் பொருந்தும்!**

நமது சங்கிகளுக்கு இந்தியா வளர்ந்து விட்டதாகவும், மோடியின் ஆட்சியில் உலகமே கண்டு பொறாமைப்படத்தக்க அளவிற்கு அனைத்து துறைகளிலும் அதிவேக வளர்ச்சியை அடைந்து விட்டது போன்ற ஒரு மாய பிம்பத்தை சமூக ஊடகங்களிலும், ஏன் விவாதங்களிலும் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர். இது உண்மைதானா? என்றால் கிடைத்திருக்கும் தரவுகள் அப்படி இல்லை என்று ஆணி அடித்ததைப் போல சொல்லி விடலாம்!

இந்தியப் பொருளாதரத்தில் விவசாயத்தின் பங்கு அளப்பரியது. மக்கள் தொகையில் 60%க்கும் மேற்பட்டோர் இன்று விவசாயத்தை மட்டுமே நம்பி யிருக்கின்றனர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாய பொருட்களின் மதிப்பு 14% ஆக குறைந்து போய் உள்ளது.

நிலையற்ற பருவநிலை பந்தாட்டங்களால் விவசாயம் பாதிக்கப்பட்டதாலும், அரசின் நிதி ஒதுக்கீடு அற்றுப் போனதாலும் இன்று கிராமங்கள் தங்களது வேலை வாய்ப்பை துறந்து, வாங்கும் சக்தியை இழந்து வறுமையிலும் உழல காரணமாகிவிட்டது.

விவசாயத்திற்கான இடுபொருள் ஒருபக்கம் உயர்வதும், மறுபுறம் விவசாய விளைபொருட்களின் விலை வீழ்ச்சியை அடைவதையும் தவிர்க்க முடியாத ஒன்றாக உலகமயச் சந்தை உருவாக்கி விட்டது. எனவேதான், வாங்கிய கடனை கட்டமுடியாத விவசாயிகள் தொடர்ந்து தற்கொலை செய்து மாண்டு வருகின்றனர். ஆனால் விஜய் மல்லையா, நீரவ் மோடி, லலித்மோடி, சோக்ஷி உள்பட 51 பேர் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை மோசடி செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று அங்கு ஒரு உல்லாச வழ்வை வாழ்ந்து வருகின்றனர்.

விவசாயிகளின் தற்கொலைச் சாவையும் தடுக்கவில்லை. நாட்டின் பணத்தை கொள்ளையடித்து வெளிநாடு சென்ற பொருளாதார குற்றவாளிகளையும் தடுக்கவில்லை. நடுநிலை வகிக்கிறதாம் ஒன்றிய அரசு!

இது இப்படி என்றால் அதானி, அம்பானி மற்றும் வேதாந்தா குழுமம் போன்ற பெரும் கார்ப்பரேட்டுகளுக்கு தாராளமாக கடன் தள்ளுபடியும் வரிச்சலுகைகளையும் வாரி, வாரி வழங்கி வருகிறது.

உழவர் பெருங்குடி மக்கள் வாங்கிய விவசாய கடனை தள்ளுபடி செய்யவும், ஏழை எளிய மாணவர்கள் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்யவும் இவர்களுக்கு போதிய நேரம் இல்லாமல் போய்விட்டது.

உலகின் 6வது மிகப்பெரிய பொருளாதார நாடாக நமது நாடு வளர்ந்து விட்டதாம்! பொருளாதாரம் அதி வேகமாக வளர்ந்து வரும் 2025ஆம் ஆண்டில் ஐந்து டிரில்லியன் டாலருக்கு நிகரான அதாவது ரூ.400 லட்சம் கோடி என்னும் அளவிற்கு நமது பொருளாதாரம் அதிவேக வளர்ச்சி அடையும் என நாடாளுமன்றத்தில் வீர உரையாற்றுகிறார் விளங்காத நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன்!

அப்படி எனில், நமது உள்நாட்டு மொத்த உற்பத்தி இன்று 3.4 டிரில்லியன் அமெரிக்க டாலராக உள்ளது. இது 2025 ஐந்து டிரில்லின் டாலராக வளர வேண்டுமெனில், நமது பொருளாதாரம் ஆண்டுதோறும் 10%க்கு மேற்பட்ட இரட்டை இலக்க வளர்ச்சியை அடைய வேண்டும். ஆனால், ஏற்கனவே இருந்த 8.2% பொருளாதார வளர்ச்சி கடந்த பல ஆண்டுகளாக படிப்படியாக குறைந்துள்ளது என்பதே உண்மை.

இந்திய குடிமக்களின் சராசரி தனிநபர் வருமானம் ஆண்டுக்கு 1850 டாலர். ஆனால் வளர்ந்த நாடுகளில் அது 12000 டாலராக உள்ளது என்பதை கணக்கில் கொண்டால் நாம் எங்கே இருக்கிறோம் என்பது தெரிய வரும்.

இப்படி 12000 டாலருக்கு உயர ஆண்டிற்கு 9% வளர்ச்சியை அடைந்தால் கூட அதற்கு 22 ஆண்டுகள் ஆகிவிடும். ஆனால் மத்திய நிதி அமைச்சரோ நமது பொருளாதாரம் இங்கிலாந்து பொருளாதாரத்தை தாண்டி மூன்றாவது இடத்திற்கு வந்துவிட்டதாக தொடர்ந்து பேசிவருகிறார். ஆனால், இங்கிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவர்களது தனிநபர் வருமானம் 29687 அமெரிக்க டாலர். இந்திய தனிநபர் வருமானம் 2256.59 அமெரிக்க டாலர்.




அதாவது, தேசிய மொத்த உற்பத்தியில் இந்திய தனிநபர் வருமானத்தை விட இங்கிலாந்து தனிநபர் வருமானம் 13 மடங்கு அதிகமாகும். ஆனாலும் பெருமை பேசுவதும், பீற்றிக் கொள்வதும் இங்கு தொடர்கிறது.

பசியால் வாடும் மக்கள் அதிகம் உள்ள நாடுகள் 117 ஆகும். இதில் இந்தியா 107வது இடத்தில் உள்ளது. அதாவது, உலகில் மிகுந்து வறுமையில் உள்ள ஏழைகள் 78 கோடி பேர். இதில் 22 கோடி பேர் இந்தியர்கள். எனவே வறுமையில் வாடும் மக்களை அதிக அளவு கொண்ட நாடு இந்தியா என்பது வெளிச்சம் போட்டு காட்டப்படுகிறது.

வருமான சமமின்மை இல்லாத உலகின் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. உலகமயம் அமல்படுத்தப்பட்ட கடந்த 30 ஆண்டுகளில் இந்த இடைவெளி ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. சுதந்திரம் பெற்ற முதல் 30 ஆண்டுகளில் ஏழை பணக்காரர் இடைவெளி ஆண்டுதோறும் குறைந்தது. அதற்கான காரணம் ஐந்தாண்டு திட்டங்களும், வேளாண் விரிவாக்க திட்டங்களும் ஆகும். ஆனால், இன்று இடைவெளி அதிகரிப்பது பொருளாதார முறையில் காலனி ஆதிக்க காலகட்டத்தை மீண்டும் கொண்டுவருவதாகவே அமைகிறது.

கடந்த 30 ஆண்டுகளில் மக்கள் தொகையில் மேல்தட்டைச் சார்ந்த 0.1% வர்களின் வருமானம் 500 மடங்காகவும், இதுவே 0.01% த்தினரின் வருமானம் 1000 மடங்காகவும் உயர்ந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த வளங்களின் 60% மேல்தட்டில் உள்ள 1% மக்களுக்கு சொந்தமாக உள்ளது. ஆனால் அடித்தளத்தில் உள்ள ஏழைகளில் 30% மக்களின் சொத்து மதிப்பு வெறும் 1.4% ஆகும்.

**உண்மை நிலைமை இப்படி இருக்க இந்த தவறுகளைக் களைய முயலாத ஒன்றிய அரசு மக்களின் கவனத்தை திசை திருப்ப அயோத்தி ராமர் கோவில், காஷ்மீர், கியான் வாபி, பசு பாதுகாப்பு, முத்தலாக், குடியுரிமை திருத்தச் சட்டம், ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே நாடு ஒரே சிவில் சட்டம் என்று தொடர்ந்து மடைமாற்றும் விவாதங்களை முன்னெடுக்கிறது. உண்மையை பேச வேண்டிய ஊடகங்களோ இன்று அரசிடம் ஊட்டம் பெறுவதற்கும், கார்ப்பரேட்டுகளை பாதுகாப்பதற்கும் இப்பிரச்சினைகளில் தலையிடாக் கொள்கையை தொடர்ந்து கடைபிடித்து வருகின்றன. உண்மை ஒருநாள் வெளியாகும். அதில் பொய்யும், புரட்டும் பலியாகும்! என்ற பட்டுக்கோட்டையின் வைர வரிகள் எதிர்காலத்தில் இங்கும் நிகழும்!**

ஒன்றிய அரசு அறிவித்த ரூ.1,45,000 கோடி வரிச் சலுகை வெறும் 800 கார்ப்பரேட் தொழிலதிபர்களுக்கு மட்டுமே பயன்தந்தது. இதனால் விளைந்த இந்த பற்றாக்குறையைப் போக்க அரசின் ஏர் இந்தியா நிறுவனத்தை வெறும் ரூ.18000 கோடிக்கு டாடா குழுமத்திற்கும், பாரத் பெட்ரோலியம், இந்திய சரக்கு பெட்டகக்கழகம், இந்திய கப்பல் போக்குவரத்துக் கழகம், வடகிழக்கு மாநிலங்களின் மின்சார வாரியம் போன்றவற்றை விற்கும் முடிவிற்கு வந்துவிட்டது. உலகின் மிகச்சிறந்த ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி.யின் பங்குகள் முதல் கட்டமாக விற்கப்பட்டுள்ளன.

பல்லாயிரம்கோடி மதிப்பில் மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்டுள்ள இந்திய விமான நிலையங்கள் தனியாருக்கு தாரை வார்த்து வருகிறது. இதற்கான இந்திய விமான தள ஆணையத்தின் அறிவுரைகளையும் புறந்தள்ளிவிட்டு ஒரு பெரும் நிறுவனத்திற்கு மூன்று விமான நிலையங்களுக்கு மேல் கொடுக்க கூடாது என்று ஏற்கனவே இருந்த அரசின் விதிமுறைகளுக்கு எதிராக இந்தத்துறையில் எந்தவித அனுபவமும் இல்லாத அதானி குழுமத்திடம் ஆறு முக்கிய விமான நிலையங்களை ஒன்றிய அரசு விற்றுள்ளது. இதில் திருவனந்தபுர விமான நிலையத்தை கேரள மாநில அரசு கேட்டும் அதற்கு செவி சாய்க்க மறுத்து அதானி குடும்பம் வாழ தொடர்ந்து செயல்படுகிறார் பிரதமர் மோடி. இது குடும்ப ஆட்சியா? கும்பினி ஆட்சியா?

உலகின் மிக பெரிய பொதுத்துறை நிறுவனமான இந்திய ரயில்வேயையும் ஒன்றிய அரசு விட்டுவைக்கவில்லை. டில்லி – லக்னோ வழித்தடத்தில் ரயில் போக்குவரத்தை நடத்திட தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மேலும் 50 வழித்தடங்களையும், 150 ரயில் நிலையங்களையும் தனியாரிடம் ஒப்படைக்க உறுதிபூண்டுள்ளது!

கடந்த 75 ஆண்டுகால வரலாற்றில் பொதுத்துறையை ரத்தமும், வியர்வையும் சிந்தி சிறுகச்சிறுக கட்டி எழுப்பியதை 2020–21 நிதியாண்டில் ரூ.2 லட்சத்தி 10 ஆயிரம்கோடிக்கு பொதுத்துறை நிறுவனங்களை குத்தகைக்கு விட்டு பணம் சேகரிக்க முயல்கிறது. ஆனால் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனோ இந்த நிறுவனங்களை விற்பதன் மூலம் புதிய முதலீட்டாளர்கள் உருவெடுப்பார்கள் என்றும், புதிய வேலை வாய்ப்புகள் பெருகும் என்று அநியாயமாக பொய் பேசி வருகிறார்.

ஆனால், உலக வளர்ச்சி மையத்தின் இந்திய இயக்குநர் பிரனாப் சென் பொருளாதரம் நிலையற்ற இந்த சூழலில் இந்திய அரசால் அதி வேகமாக மேற்கொள்ளப்படும் தனியார்மயமாக்கல் சாதகங்களைவிட பாதகங்களையே அதிகம் ஏற்படுத்தும். வேறு ஏதாவது தொழில் தொடங்க நினைப்பவர்கள்கூட குறைந்த விலைக்கு பொதுத்துறை நிறுவனங்களை வாங்க முனைவார்கள். அதனால், புதிய தொழில்களும், புதிய வேலை வாய்ப்புகளும் உருவாகாது என்று அழுத்தமாக கூறியுள்ளார்.

சமீபத்தில் வெளியான ஆக்ஸ்பாம் பொருளாதார ஆய்வு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்தியாவின் மேல்தட்டினர் 30 சதவீதத்தினர் 90 சத இந்திய செல்வ வளத்தை கொண்டிருக்கின்றனர் என்றும் அதில் முதல் 10 சதத்தினர் நாட்டின் 72 சத சொத்தையும், முதல் 5 சதத்தினர் 62 சதவிகித தேச சொத்தையும் கொண்டிருப்பதாக ஆய்வுகள் வந்திருக்கின்றன.

அத்துடன் கடந்த 2020ல் இந்தியாவின் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 102ஆகு இருந்தது மேலும் உயர்ந்து 2022ல் 166 ஆக உயர்ந்துள்ளது. ஆனால் சீனாவிலும் ஐரோப்பாவிலும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அமெரிக்காவில் ஏறவும் இல்லை இறங்கவும் இல்லை. இந்தியாவில் மட்டும் ஏன் இந்த ஏறுமுகம்?

கார்ப்பரேட்டுகளுக்கான வரி 30%ல் இருந்து இன்று 22%ஆக குறைக்கப்பட்டு விட்டது. இதன்மூலம் மட்டும் இந்திய அரசுக்கு ரூ.1.84 லட்சம்கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

வாய்ப்புகள் அனைத்தும் தண்ணீராய் மாற்றி கார்ப்பரேட்டுகளின் வயல்களுக்குமட்டுமே திருப்பி விட்டதன் விளைவு இன்று அவர்களின் வருமானம் சுமார் 56% அதிகரித்துள்ளது. ஆனால், சாதாரண மக்களுக்கோ வரிச்சுமையை மட்டும் வழங்கிவிட்டது.

மறைமுக வரியான ஜி.எஸ்.டி.யின் பங்களிப்பில் மேல்தட்டு 10%த்தினரின் பங்களிப்பு வெறும் 3 சதம் தான். அடித்தட்டில் உள்ள 50% சாதாரண மக்களின் ஜி.எஸ்.டி. பங்களிப்பு 64% ஆகும். 40% நடுத்தர மக்களின் ஜி.எஸ்.டி. பங்களிப்பு 33%. எங்கே எடுத்து எங்கே செலவு செய்கிறார்கள் என்பது இங்கே வெட்ட வெளிச்சமாகி விட்டது! வாழ்க்கையை சீரழித்துவிட்டு வெறும் வாய்ப்பந்தலின் மூலம் தேசபக்தியை இன்று நமக்கு ஊட்டுகிறார்கள். உண்மையில் மெய்யான தேசபக்தி என்பது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவமும், வேலை வாய்ப்பை உருவாக்குவதும்தான். இதை உருவாக்காத மோடி அரசுதான் மதத்தை கருவாக்கி கலவரத்தை உருவாக்கி தன்னை திருவாக்கி கொண்டிருக்கிறது.

வெடித்தெழும் போராட்டத்தின் மூலம் இந்த ஆசைகளை எருவாக்கிவிடும் என்பது மட்டும் திண்ணம்!

தொடர்புக்கு: 9444481703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 43

## பிபிசியின் ஆவணமும், மோடியின் ஆணவமும்

குஜராத் மாநில முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்தபோது, கோத்ராவைத் தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்த படுகொலைகள் வன்முறைகளை பற்றி வெளிநாட்டு செய்தியாளர் அடுக்கடுக்காக கேள்விகளை முன் வைத்தார்.

எல்லா கேள்விகளுக்கும் "நீங்கள் சொல்வது தவறு", "அவ்வாறு எதுவும் நடக்கவில்லை", "உங்களுக்கு தவறாக தகவல் தரப்பட்டிருக்கிறது", எங்கள் அரசுக்கு இடையூறு செய்வதற்காக இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது" என்றே மோடி பதிலளித்தார்.

களைத்துப் போன பத்திரிகையாளர், கடைசியாக "இந்த கலவரத்தைக் கையாள்வதில் உங்களுக்கு ஏற்பட்ட தோல்வி எது என்று கருதுகிறீர்கள்?" எனக் கேட்டார். அதற்கு "இந்த ஊடகங்களை சரியாகக் கட்டுப்படுத்தி வைக்காதது தான் எங்கள் தோல்வி" என்று மோடி பதில் சொன்னார்.

பிரதமரான பின் அந்தத் 'தோல்வி'யை அவர் தொடர விரும்பவில்லை. இந்தியாவின் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களின் உரிமையாளர்கள், ஆசிரியர்கள் தொடங்கி, செய்தியாளர்கள் வரை, பெரும் பகுதியினர் பிரதமரின் பக்தர்கள். அவருக்கு எதிராக ஒரு செய்தி வந்துவிடாமல் பார்த்துக் கொள்வது மட்டுமல்லாது, அவரது புகழ் பாடும் பஜனை கோஷ்டியாக மாற்றப்பட்டு விட்டன. ஆனாலும் பிரதமர் பத்திரிக்கையாளர் கூட்டத்தில் பங்கேற்பதில்லை.

யாராவது ஒரு பத்திரிகையாளர் மோடியின் விருப்பங்களுக்கு விரோதமாக எழுதினால், அவரது வாழ்க்கையில் மறக்கவே முடியாத ஒரு விலையை கொடுத்துத் தீர வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது.

பிரிட்டனைச் சேர்ந்த பிபிசி தொலைக்காட்சி, 2002 குஜராத் வன்முறைகளைப் பற்றிய ஆவணங்களின் தொகுப்பை ஒரு மணி நேரம் வரை ஓடும் காட்சிப் படமாக வெளியிட்டுள்ளது.

அந்த ஆவணப்படத்தை இந்தியாவில் யாரும் ஆன்லைனில் பார்க்க முடியாதபடி தடை செய்து விட்டார்கள். ஒரு நிமிடம் மட்டுமே ஓடுகிற துண்டாக வெட்டிக் கூட, ட்விட்டரில் இணைத்து குறிப்பு போட முடியாது. உங்கள் ட்விட்டர் கணக்கு முடக்கப்பட்டு விடும். எந்த சமூக வலைத்தளத்திலும் வெளியிட முடியாது. இந்தியர்கள், இந்தியாவில் இந்தப் படத்தைப் பார்க்க முடியாது என்பதை உறுதி செய்வதில் அரசு இயந்திரத்தின் முழு ஆற்றல்களும் பயன்படுத்தப்படுகின்றன.

வழக்கமாக மோடி அரசு இக்கட்டான நிலையை எட்டும் போதெல்லாம், அவருக்கு முட்டுக் கொடுக்க நிலைய வித்துவான்கள் போல ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள், முன்னாள் நீதிபதிகள், தூதர்கள் வரிசை கட்டி வந்து விடுவார்கள். இப்போதும் "இந்தப் படத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. உள் நோக்கத்தோடு செய்யப்பட்ட எடுக்கப்பட்ட மோசமான நடவடிக்கை" என்றெல்லாம் அவர்கள் அறிக்கை வரைந்து தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

காலனிய மனநிலை, ஏகாதிபத்திய மேலாதிக்கம், காலனித்துவத்துவ போதை மருந்து என்றெல்லாம் அவர்கள் புலம்பி தள்ளுகிறார்கள். காலனி ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியர்கள் விடுதலைச் சமரத்தில் முழுமூச்சாய் ஈடுபட்டு இருந்த காலத்தில், அந்தக் காலனி முதலாளிகளுக்கு, ஆர்எஸ்எஸ், கால் சொறிந்து விட்டுக் கொண்டிருந்த வரலாற்றை அறிந்தவர்கள் வெடித்துச் சிரிக்கிறார்கள்.

அரசாங்கம் தான் கையில் இருக்கிறதே! பொய்யான தகவலோ, திரித்துத் தரப்பட்ட செய்திகளோ இருந்தால், சரியான ஆதாரத்தை முன்வைத்து பிபிசி நிறுவனத்தைக் மோடி அரசு, கிழித்தெறிய வேண்டியது தானே. சங்கிகள் வெளியிடும் போலி வீடியோக்கள் எல்லாவற்றையும், எந்த வசதியும் இல்லாத நிலையிலும், சாதாரண குடிமக்கள் தோலுரித்து சந்தி சிரிக்க விடவில்லையா! ஏன் மோடி அரசு அதைச் செய்யவில்லை?

இன்றைய நவீன அறிவியலில், ஒரு படத்தை பார்த்து விடாமலேயே தடுத்து விடுவது அவ்வளவு எளிதல்ல. பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு விடாது.

இந்த ஆவணப்படத்தைத் திரையிட்டுப் பார்க்க முயன்றதற்காக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் மற்றும் ஜமியா மிலியா பல்கலைக்கழக மாணவர்களை மோடி அரசு கைது செய்திருக்கிறது. ஒரு மணி நேர டாக்குமெண்டரி படத்தைப் பார்த்து, மோடி அரசு பயந்து சாகிறது.

73 வது குடியரசு தினத்தை கொண்டாட ஒன்றிய அரசு தன் எல்லா கட்டிடங்களிலும் சீரியல் விளக்குகளை போட்டு அலங்கரித்து இருக்கிறது. ஆனால் தனது கருத்தை வெளிப்படுத்தும் அடிப்படை உரிமையைப் பாதுக்காப்பதுதான் உண்மையான ஜனநாயகம்.

குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நீதியும், சிந்தனை வெளிப்பாட்டில் நம்பிக்கையும், சமய நம்பிக்கை மற்றும் வழிபாட்டில் சுதந்திரமும், தகுதி நிலையில் மற்றும் வாய்ப்பில் சமத்துவமும், உறுதியாகக் கிடைக்கச் செய்வோம் என உறுதி அளிக்கும் அரசியலமைப்புச் சட்டத்துக்கு நேர் மாறாக நடந்து கொள்பவர்களுக்கு குடியரசு தினத்தை கொண்டாட எள்முனை அளவும் அருகதை இல்லை.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் 60 குடும்பங்கள் இணைந்தனர்



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், எழிலூர் கிளையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் 60 குடும்பங்கள் இணைந்த நிகழ்ச்சி நடைபெற்றது. கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., ஆகியோர் கட்சியின் இணைந்த தோழர்களுக்கு செந்துண்டு அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கே. உலகநாதன் எக்ஸ்.எம். எல்.ஏ. க.மாரிமுத்து எம்.எல்.ஏ, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.வையாபுரி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இரெ. ஞானமோகன், பி.வி.சந்திரராமன், எஸ்.தமயந்தி, கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, வி.ஜவஹர் ஒன்றிய செயலாளர், ஒன்றிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம். மகாலிங்கம், அ.மூர்த்தி, கே. விஜயா, கோ. சரவணன், ஜி.குருமணி, எஸ்.சுப்பிரமணியன் ஊ.ம.தலைவர், அ.குமரேசன், கிளை செயலாளர் எஸ்.பழனிவேல் மற்றும் தலைவர்கள், தோழர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கட்சியில் இணைந்த தோழர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## ஜீவா நினைவு நாளில் 58 யூனிட் ரத்த தானம்

இலக்கிய பேராசான் ப.ஜீவானந்தம் 60 ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி கோவையை அடுத்த பாப்பம்பட்டி பிரிவு செல்வராஜபுரத்தில் ரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 4 பெண்கள் உட்பட 58 பேர் ரத்தம் வழங்கினர். கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இந்த ரத்தம் கொடையாக வழங்கப்பட்டது. ரத்ததான நிகழ்ச்சிக்கு ஜி.ஆர்.மணி தலைமை தாங்கினார். ஜீவா படத்தை வே.பாலசுந்தரம் திறந்து வைத்தார். பாலதண்டாயுதம் படத்தை சி.கே. எஸ்.முரளிதரன் திறந்து வைத்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பெ. மவுனசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சூலூர் தெற்கு வட்ட குழுவின் செயலாளர் வே.வசந்தகுமார் உட்பட ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

2 ம் பக்கத் தொடர்ச்சி

இந்தக் காலகட்டத்தில் தோழர் ப.மாணிக்கம் மாணவர் அரங்கின் பொறுப்பேற்று பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் நேரில் சென்று அமைப்பை உருவாக்குவதில் தனிக் கவனம் செலுத்தினார்.

ஏராளமான மாணவர் தலைவர்களை உருவாக்கினார். அவர் மேற்கொண்ட அயராத பணியின் காரணமாக மாணவர் பெருமன்றம் மிகப் பெரும் எழுச்சியோடு இயங்க தொடங்கியது.

அந்தக் காலத்தில் திருச்சி மாநகரின் தேவர் ஹாலில் மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு சிறப்பு மாநாடு 1970 பிப்ரவரி 28, மற்றும் மார்ச் 1 ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் அனைத்து பல்கலைக் கழகம், கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு தலைவர்கள் தோழர்கள் எம்.கல்யாணசுந்தரம், ப.மாணிக்கம், தா.பாண்டியன், கே.டி.ராஜூ போன்ற தலைவர்களுடன் சிறப்பு விருந்தினராக தோழர் கே.பாலதண்டாயுதம் பங்கேற்று சிறப்பித்தார்.

முதல்நாள் மாலை சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் பாலன் சிங்கமென கர்ஜித்தார். மன்னர் மானிய ஒழிப்பு, வங்கி தேசவுடைமை ஆக்கப் பெற்றது போன்ற மிக முக்கிய சம்பவங்கள் நடைபெற்ற காலமது.

மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டதை நீதிமன்றம் நிராகரித்தது. "மனிதனின் சொத்துரிமையை பறிக்கக் கூடிய செயலாகும், இது அரசியலமைப்பு சட்டத்திற்கு புறம்பானது" என தீர்ப்பளித்தது.

நீதிமன்றத் தீர்ப்பை கண்டித்துப் பேசிய பாலன், "நான் ஒன்றே முக்கால் ரூபாய்க்கு ஒரு பேனா கத்தி வாங்கினேன் எனில், அது என்னுடைய சொத்து, எனக்கு சொந்த சொத்தான பேனா கத்தியைக் கொண்டு எனக்கு வேண்டாதவர்களை குத்திக் கொல்ல சட்டம் அனுமதிக்குமா?

முக்கால் அனா கொடுத்து ஒரு தீப்பெட்டி வாங்கினேன், அது எனக்கு சொந்தமான சொத்து, அதனைக் கொண்டு எனக்கு வேண்டாதவர்களின் வீடுகளுக்கு தீ வைத்தால் சட்டம் என்னை சும்மா விடுமா?" எனக் கேள்வி எழுப்பி கர்ஜித்தார்.

அரங்கம் முழுவதும் நிறைந்திருந்த மாணவர்கள் அனைவரும் ஒரு சேர எழுந்து நின்று, விண்ணதிர ஆரவார முழக்கமிட்டனர்.

மாணவர்களின் பேரெழுச்சி இன்னும் கண் முன் காட்சியாக நிற்கிறது. அந்த வீரப் பெரும்படையின் மாநில மாநாட்டையொட்டி பிப்ரவரி 5ம் நாள் சென்னை மாநகரில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் போர்க்குரல் எழுப்பி பேரணியாய் அணிவகுக்க உள்ளனர்.

- தொடக்க கல்வி முதல் உயர் கல்வி வரை இலவசமாக வழங்கு!
- கல்வி நிலையங்கள் அனைத்தையும் அரசே ஏற்று நடத்து.
- கல்வி வியாபாரத்தை தடை செய்ய வேண்டும்,
- தேசிய கல்வி கொள்கை என்ற பெயரால் கல்வி உரிமையை பறிக்காதே!

என விண்ணதிர மாணவர்கள் எழுப்பும் முழக்கம் ஒன்றிய ஆட்சியை அலற வைக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை.

- மாணவர்கள் அணி திரள அனைத்து உதவிகளும் செய்திடுவீர்.
- மாணவர் படை தலைநகர் நோக்கி அணி, அணியாக புறப்பட்டு, புற்றீசல் போல் கூட்டம், கூட்டமாக புறப்பட்டு வர உதவிக்கரம் நீட்டிடுவீர்!
- எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்கள் ஜொலிக்கட்டும்!

மீண்டும் சந்திப்போம்.
வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# தேசத்தின் எதிர்காலத்தின் மீது சூழ்ந்திருக்கும் பாசிச அபாயத்தை முறியடிப்போம்

**2024 பொதுத் தேர்தல்களுக்கு 400 நாட்கள் இருக்கு, என அறிவித்த பிரதமர் நரேந்திரமோடி, ‘தேர்தல் நோக்கங்களைத் தள்ளி வைத்து அனைத்துப் பிரிவு மக்களின் நலன்களுக்காகப் பணியாற்றுங்கள்’ என பாஜக அணிகளை வற்புறுத்தி பாஜக தேசியச் செயற்குழுவில் பேசி யிருக்கிறார்.**

பாசிசத் தத்துவத்தின் மூலம் தங்கள் அணிகளை ஆர்எஸ்எஸ்–பாஜக எப்படி உசுப்பி விடுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.இரண்டுநாள் கூட்டம்முழுமையும் தேர்தல்களை நோக்கியும், விவாதங்கள் பாஜகவை முந்திக் கொண்டு உண்மையில் ஆர்எஸ்எஸ் கடந்த ஆண்டு முதலே தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டது. ஆர்எஸ்எஸ் ஒரு லட்சம் புதிய கிளைகள் என இலக்கு நிர்ணயித்து செயல்படுவதன் நோக்கம், நாட்டின் அனைத்து வாக்கு மையங்களிலும் பாஜக செயல்பாட்டைத் தீவிரப்படுத்துவதே.

நாட்டின் பல அரசியல் சக்திகளும் பல்வேறு முக்கிய மற்றும் முக்கியமற்ற வேலைகளில் ஈடுபடும்போது ஆர்எஸ்எஸ் மட்டும் சப்தமில்லாமல் தேர்தல்களில் மட்டுமே கவனத்தைக் குவித்துத் தங்கள் பணிகளைச் செய்துவருகிறது. பாசிசத் தத்துவக் கருத்தின் கூர்மையை இது காட்டுகிறது.

கடந்த காலங்களில் பாஜகவுக்கு நல்ல தேர்தல் அறுவடையைப் பெற உதவிய அதே கருத்துகள், திட்டங்களுடன் அவர்கள் தேர்தல்களைச் சந்திக்க உள்ளனர். அக்கட்சியிடம் வேறு புதிய தத்துவார்த்த அல்லது அரசியல் கருத்துகள் இல்லை, அது எப்போதும் தீவிர வலதுசாரி மற்றும் அதி பணக்காரர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த உறுதிபூண்ட கட்சியே ஆகும். இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனியின் அடால்ஃப் ஹிட்லர் வார்த்தளித்த பாசிச அடித் தடங்களை அவர்கள் பின்பற்றுகிறார்கள். அவர்களின் கலாச்சாரத் தேசியவாதத்தின் அடிப்படை கோட்பாடாகப் பயன்பட்ட இனப் பெருமிதத்தை ஆர்எஸ்எஸ் – பாஜக பெரும் உற்சாகத்துடன் நடைமுறைப்படுத்தத் துணிந்து விட்டன.

ஆட்சியின் அனைத்துத் தோல்விகளை பிரச்சாரக் கூச்சல்களின் மறைப்பில் பாஜக மூடி மறைக்க முயல்கிறது. அந்தப் பிரச்சாரத்தின் உச்சமாக இராமர் கோயில் இருக்கப் போகிறது. அதிகாரப் போட்டியின் முச்சந்தியில் பகவான் இராமர் மீண்டும் இழுக்கப்படுகிறார். இந்தப் போக்கு இறைவன் மீது பயபக்தியுடைய கோட்பாடுகளில் உண்மையான நம்பிக்கை கொண்டவர்கள் நினைத்தும் பார்க்காதது.

பிரச்சாரத்திற்குப் பளபளக்கும் அரசியல் வண்ணம் பூச, ஜி 20 நாடுகள் அமைப்பின் இந்தியத் தலைமைப் பொறுப்பு பெரிதும் பரவலாகப் பயன்படுத்தப்பட உள்ளது. தொடக்கம் முதலே ஜி20 தலைமைப் பொறுப்பு ஏதோ மோடி தலைமையிலான இந்தியாவுக்கு உலகின் பிற நாடுகளால் அளிக்கப்பட்ட புதிய கவுரவம்போல பாஜக ஃபிலிம் காட்டி வருகிறது.

ஆனால் மிகச் சாதாரணமான உண்மை யாதெனில், அந்த அமைப்பில் அப்பொறுப்பு அனைத்து நாடுகளுக்கும் சுழற்சி முறையில் அளிக்கப்பட்டுவரும் வகையில், இம்முறை இந்தியாவுக்கு வழங்கப்பட்டதைத் தவிர, சிறப்பாக அதில் ஒன்றுமில்லை !.

பிரச்சாரத்தின் அடுத்த மிக முக்கியமான அம்சம் ஏழைகளின் நலவாழ்வு குறித்தது, ஏனெனில் வாக்காளர்களில் ஏழைகளே பெரும்பகுதியினர். தேசியச் செயற்குழு தீர்மானங்கள், அறிக்கைகளின் சாராம்சம், பொது மக்களின் மனங்களை வெல்வது, மீண்டும் ஒரு முறை ஆட்சியைப் பிடிப்பது

## கூடிக் கலைந்தது பா.ஜ.க பேராயம் கேள்விகள் அப்படியே நீடிக்கின்றன...

என்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சமீபகாலங்களில் நிதி அமைச்சர் மிகக் கூடுதலாக நடுத்தர வர்க்கத்தினர் குறித்துப் பேசுகிறார். கிராப்புற, நகர்ப்புறங்களில் முக்கியமாக அபிப்ராயங்களை உருவாக்குபவர்கள் நடுத்தர வர்க்கத்தினர் என்பதை ஆர்எஸ்எஸ் – பாஜக கொள்கை திட்டங்களை வகுப்பவர்கள் நன்கு புரிந்துள்ளதால், நடுத்தர வர்க்கத்தினரைத் தாஜா செய்யப் புறப்பட்டுவிட்டனர்.

ஆனால் வாழ்வின் எதார்த்த உண்மைகள் 2014முதல் பாஜக ஆட்சி மக்களின் பெரும் பகுதியினரை, கீழ்நிலை நடுத்தர வர்க்கம் தொடங்கிகுறிப்பாக தலித்கள், ஆதிவாசிகள், வசதி வாய்ப்புக் குறைந்தவர்கள் உள்ளிட்ட சமூகத்தின் அடிமட்ட ஜனத்திரளை ஏமாற்றி துரோகம் இழைத்துவிட்டது என்பதை அம்பலப்படுத்துகிறது.



தங்கள் தேர்தல் உத்திகளில் ஒரு பகுதியாக, பாஜக தலைமை அதனது அனைத்து எதிர்த்தரப்பினர்களுக்கு எதிராக அரசியல் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. உண்மையில் பாஜக எதிர்காலம் குறித்து மிரண்டுபோய் உள்ளது. சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிடையே வளர்ந்துள்ள அதிருப்தியை அது புறக்கணித்துவிட முடியாது. நாடு முழுவதும் பலவழிகளில் மக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டதனால், பாஜக ஆதரவு ‘பாரதிய மஸ்தூர் சங்’ (பிஎம்எஸ்), ‘சுதேசி ஜாக்ரன் மஞ்ச்’ ஆகிய அமைப்புகள்கூட அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கடுமையாக விமர்சிக்கின்றன.

வெறுத்துப்போன அதிருப்தியாளர்களைச் சமாதானப்படுத்த கலாச்சார தேசியவாதம் மற்றும் ராமர் கோயில் போன்ற மதவாத முழக்கங்கள் மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்கண்டப் பின்னணியில்தான் ஆக்ஸ்ஃபாம் சர்வதேச ஆய்வு தன்னார்வ அமைப்பு வெளியிட்ட நாட்டின் அசமத்துவம் குறித்த அறிக்கை (2023) தங்கள் எதிர்காலம் குறித்த அவர்களின் கவலைகளைத் தீவிரமாக்கிவிட்டது. ஆக்ஸ்ஃபாம் அறிக்கை இந்தியாவின் உண்மையான வாழ்வியல் நிலைமையின் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சியுள்ளது.

“அசமத்துவத்தின் தாக்கம், குறிப்பாக இந்தியச் சமூகத்தின் விளிம்புநிலை வகுப்பினரின் துன்ப துயரங்களைப் பட்டவர்த்தனமாகக் காட்டுகிறது; பழங்குடி யினர் மற்றும் பட்டியல் சாதி போன்ற சில வகுப்பினர்கள் உடல்ரீதியாகவே எளிதில் சென்றடைய முடியாத தொலைதூர இடங்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டு, வாழ்வில் எந்த வகையிலும் மேலே உயர்ந்து செல்வதைச் சாதிக்க முடியாதபடி திட்டமிட்டு ஒதுக்கி வைக்கப்படும் துன்பங்களில் உழல்கிறார்கள்” என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள இடைவெளி உண்மையில் அகலமாகி வருவதை மறைக்க முடியவில்லை. “2019ம் ஆண்டின் பெருந்தொற்றை அடுத்து மக்கள் தொகையின் கீழ்ப்பகுதி செம்பாதியினர் தங்கள் செல்வம் மேலும் வெட்டி குறைக்கப்பட்டதைக் கண்டனர். 2020 ஆண்டு வாக்கில் தேசிய வருமானத்தில் அவர்களின் பங்கு 13 சதவீதமாக வீழ்ச்சி அடைந்து, மொத்த செல்வத்தில் வெறும் 3 சதவீதத்தை மட்டுமே அவர்கள் பெற்றிருந்தனர் என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதன் தாக்கத்தின் விளைவு அவர்கள் உண்ணும் உணவின் அளவும் தரமும் மோசமாகக் குறைந்தது, கடன் சுமையும் சாவுகளும் அதிகரித்தன”.

பெரும் பணக்காரர்களில் 10சதவீதம் இந்தியாவின் மொத்த செல்வத்தில் 72 சதவீதமும்; அவர்களுள் மேலே உள்ள 5 சதவீதத்தினர் சுமார் 65 சதவீதமும்; அதற்கும் மேல் உள்ள ஒரு சதவீதத்தினர் மட்டும் கிட்டத்தட்ட இந்தியாவின் மொத்த செல்வத்தில் 40.6 சதவீதத்தை உடைமையாக வைத்துள்ளனர்.

இன்னும் இந்தியாவில் உலகத்தின் மிக அதிகபட்சமான எண்ணிக்கையில் 22 கோடியே89லட்சம்ஏழைகள்உள்ளனர்.அதன் மறுபக்கத்தில் 2020ல் நூறு கோடிக்கும் மேல் சொத்துள்ள பில்லினியர்கள் இந்தியாவில் 102பேர்களாக இருந்தது, 2022ம் ஆண்டில் 166 அதிகோடீஸ்வரர்களாக உயர்ந்தது. இந்தியாவின் முதல் வரிசையில் உள்ள 100 அதிபணக்காரர்களின் ஒட்டுமொத்த செல்வம் நாம் மலைக்கும் வகையில் இந்திய ரூபாயில் 54.12 லட்சம் கோடியைத் தொட்டுள்ளது. உச்சத்தில் உள்ள 10 பகாசுரப் பணக்காரர்களின் செல்வம் 2021லிருந்து 32.8 சதவீதம் அதிகரித்து இந்திய ரூபாயில் 27.52 லட்சம் கோடியில் நிற்கிறது” என்று அந்த அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

இந்த உண்மைகள், புள்ளிவிபரங்கள் இந்தியாவை வெறித்துப் பார்க்கும்போது, பாஜகபிரச்சாரபீரங்கிகள்தங்கள்சக்திஎல்லாம் பயன்படுத்தி ‘மோடிப் பொருளாதார’த்தின் முற்றுமுதலாக வாய்ச்சவடால் காலிடப்பாவின் பெருமைகளை தொண்டை கிழியப் பிரச்சாரம் செய்கிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு எதிராக வெறித்தனமான சொற்களைப் பயன்படுத்தும் பாஜக செய்தித் தொடர்பாளர்கள், தங்களது வரிவிதிக்கும் கொள்கைகள் குறித்து மனமறிய மௌனமாகி விடுகின்றனர். அது குறித்து ஆக்ஸ்பாம் அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

“2019 பெருந் தொற்றிற்கு முன் ஒன்றிய அரசு, கார்ப்பரேட் வரி விகிதங்களை 30%லிருந்து 22 சதவீதமாகக் குறைத்ததுடன், புதிதாக ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்கள் அதனினும் குறைவாக 15 சதவீத வரியைக் கட்டினால் போதும் என்றது. இந்தப் புதிய வரி விதிப்புக் கொள்கை இந்திய ரூபாயில் 1.84 லட்சம் கோடி மொத்த இழப்பை ஏற்படுத்தியது; இதனால் 2019 20 நிதியாண்டிற்கான வரி வருவாய் மதிப்பீடுகளை மிகக் குறிப்பிடத்தக்க வகையில் 10 சதவீதம் குறைத்துத் திருத்த வேண்டி வந்தது.

மேலும் வருவாயை அதிகரிக்க வேண்டி ஒன்றிய அரசு ஜிஎஸ்டி மற்றும் டீசல், பெட்ரோல் மீதான எக்ஸைஸ் வரி மற்றும் அதே நேரத்தில் விதிவிலக்குகளையும் வெட்டியது. ஜிஎஸ்டி மற்றும் எரிபொருள் வரி இரண்டின் மீதான வரிஉயர்வின் மறைமுகத் தன்மை மிகவும் பின்னோக்கி இழுப்பதாகும் இதன் தவிர்க்க முடியாத விளைவு, மிகவும் விளிம்புநிலையில் உள்ள அப்பாவி மக்கள் தலையில் சுமையாக இறங்கியது”

தேசியச் செயற்குழுவிலும் செல்வவரியின் விகிதாச்சாரம் குறித்து பாஜக மௌனம் சாதித்தது. நெருக்கடியின் சுமையை மடைமாற்றி ஏழைகள், விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட ஏதிலிகளின் தலையில் சுமத்துவதும், அதி பணக்காரர்களின் முடிவுறாதப் பேராசையைப் பாதுகாப்பதுமே பாஜகவின் பொருளாதாரக் கொள்கை. அந்தப் பைத்தியக்கார ஓட்டத்தில், சுதேசி பேசும் ஆர்எஸ்எஸ் பாஜக, அந்நிய நேரடி முதலீட்டின் விஸ்வாசமான அடிவருடிகளாகி விட்டன. அந்நிய மற்றும் உள்நாட்டு மூலதனத்திற்கு எல்லையற்று அடிமைச் சேவகம் செய்வதற்கான காரணங்களைத் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கே அவர்கள் விளக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்நாட்டின் ‘அன்ன தாதா’களாகிய விவசாயிகளுக்குச் சட்டரீதியாக உறுதியளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை அளிப்பதான வாக்குறுதியிலிருந்து நழுவிச் சென்றதற்கான காரணங்களை வேளாண்குடி மக்களுக்கு அவர்கள் விளக்க வேண்டும். அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் மற்றும் பிற சமூகப் பாதுகாப்பு நடவடிக்கை போன்ற செயல்திட்டங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டைக் குறைத்ததற்கான காரணங்களை அவர்கள் விளிம்புநிலை மக்களுக்கு விளக்க வேண்டும்.

2023ல் நடைபெற உள்ள ஒன்பது மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களில் எப்படியும் வென்றிட வேண்டிய கவலை தோய்ந்த பரபரப்பைப் பாஜக தேசியச் செயற்குழுவின் அறிக்கைகளில் பார்க்க முடிகிறது. மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற பாசிசக் கருத்தோட்டத்தின் தலைமையில் வழிநடத்தப்படும் அந்தத் தீவிர வலதுசாரி கட்சி, தன்வசம் உள்ள அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்தும் என்பது தெளிவு. அத்தகைய நிலைமை இந்தியாவின் மதசார்பற்ற ஜனநாயக அடித்தளத்திற்குப் பேராபத்து. பாஜகவின் வெற்றி எப்போதும் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் பிரிவதன் காரணமாகவே சாத்தியமாகிறது. வரும் தேர்தல்களிலும் எதிர்க்கட்சிகளின் வாக்குகளைச் சிதறடித்துப் பிளவுபடுத்தி மீண்டும் இந்நாட்டை ஆளும் எண்ணம் அதுவே அவர்களது வியூக அணுகுமுறையாக இருக்கும்.

இந்நாட்டின் அரசியல் சட்டத் தத்துவமான மதசார்பற்ற ஜனநாயகத்திற்குப் பாடுபடும் உறுதிப்பாட்டை பூண்ட, வலுவான நிலையில் இருக்கும் அனைத்து சக்திகளுக்கும் இச்சூழ்நிலையின் கடுமையைப் புரிந்து கொண்டு எதிர்வரும் தேர்தல்களுக்கான தங்களின் செயல்பாட்டுத் திட்டங்களை வகுப்பதற்கு இதுவே சரியான உரிய தருணம். ‘தேசத்தின் எதிர்காலத்தின் மீது சூழ்ந்து நிற்கும் பாசிச ஆபத்தை முறியடித்துத் தோற்கடிக்க நாட்டின் அவசரத் தேவை மதசார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி சக்திகளின் பரந்துபட்ட ஒற்றுமையே. மக்களை ஒன்று திரட்டிப் போரைத் தொடுப்பதற்கான நேரம் வந்து விட்டது.

களம் தயாராக இருக்கிறது, நாம் ஒன்றுபட்டுப் போராடத் தயாரா? தேசம் நம்மிடம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது !

**– நியூஏஜ் தலையங்கம் (ஜன.22 28)**

**தமிழில் : நீலகண்டன்,**

**என்எப்டிஇ, கடலூர்**

# தீப்பந்தம் ஏந்தி தீண்டாமைக்கு தீயிடுவோம்!

செ.ராஜ்குமார்

**வரலாறு நெடுகிலும் அதிகாரத்திற்கும் மக்களுக்குமான முரண்கள் பல்வேறு வடிவங்களாக தோன்றி, அடக்குமுறைகள் மேலோங்கி, அடக்குமுறைகளை எதிர்த்தும் வளர்ந்தும் தீர்வு கண்டும் தொடர்ந்து களத்தில் நின்று கொண்டிருக்கிறது.அதிகாரத்தை கொண்டவர்கள், தன் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள, சூழ்ச்சிகளோடு பிற்போக்கு கருத்துக்களை மக்களிடம் விதைத்தனர்.**



இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள், அரசன் முதல் கடைநிலை மக்கள் வரையிலும் பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கொண்டவர்கள் என்ற வர்ணாசிரம கோட்பாட்டை கடவுளின் பெயரால் கற்பித்தனர்.

பிரம்மனின் தலையில் பிறந்தவன் பிராமணன்
தோளில் பிறந்தவன் சத்ரியன்
இடையில் பிறந்தவன் வைஷ்ணவன்
காலில் பிறந்தவன் சூத்திரன்
என்று வரையறுத்து பரப்பினான்.

சமூகத்தில் உடலால் உழைத்து வியர்வை சிந்தி உழைப்பவர்கள் அனைவரும் சூத்திரர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். பெண்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவராக இருந்தாலும் பிராமண வகுப்பிலே பிறந்திருந்தாலும் அவர்கள் சூத்திரர் பட்டியலிலேயே சேர்க்கப்பட்டனர்.

சூத்திரர்கள் என்போர் மற்ற வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு பணிபுரிவதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்று கற்பித்தனர். அறிவியலுக்கு பொருந்தாத, மூடத்தனமான கருத்துக்களை கடவுளின் பெயரால் திணித்தனர். கல்வி, மனித உரிமைகள் அடியோடு மறுக்கப்பட்டு, உடல் உழைப்பின் மூலமாகவும், உளவியலாகவும் அடிமைகளாக்கப்பட்டனர்.

காலம் காலமாக மனித சமூகத்தில் ஊடுருவிய சாதிய ஏற்றத்தாழ்வை அகற்றுவதற்கு, தொடர்ந்து போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னும், குடியரசு ஆன பின்னும் சாதியின் பெயரால் பட்டியலின மக்கள், பழங்குடியினர் சுதந்திர இந்தியாவின் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். டாக்டர் அம்பேத்கர் தலைமையில் உருவான அரசியல் அமைப்புச் சட்டம், இந்திய எல்லைக்குள் இனம், மொழி, சாதி, பாலினம், பிறப்பிடம் எதன் அடிப்படை யிலுமான பாகுபாடு கூடாது என்றும், சட்டத்திற்கு முன் சமத்துவத்தையோ அல்லது சமமான பாதுகாப்பையோ அரசு மறுக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டுகிறது.

ஆனாலும் ஒடுக்கப்பட்ட மக்கள், சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் அதிகாரச் சுரண்டலுக்கு, பொருளாதார சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவது, அடிமைகளாக நடத்தப்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு மறுக்கப்படுவது, ஊர் பொதுவில் வாழ மறுக்கப்படுவது, பொதுத் தெருவில் நடக்க மறுக்கப்படுவது, பொது குளத்தில் நீர் பயன்படுத்த மறுக்கப்படுவது, கோவில் நுழைவு மறுக்கப்படுவது, கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவது, இழிவாக நடத்தப்படுவது, மனுதர்மத்தின், மதத்தின் விதிகளை, நம்பிக்கைகளை மீறியதாக கொலை செய்யப்படுவது என சொல்லொணா கடும் கொடுமைகளை அனுபவித்து வருவது தொடர்கிறது.

2022 டிசம்பரில் புதுக்கோட்டை மாவட்டம், வேங்கை வயல், இறையூரில் பட்டியலின மக்கள் வாழும் பகுதியில் இருக்கும் நீர் தேக்க தொட்டியில் மலம் கலந்த சம்பவம் நடந்திருக்கிறது. மாவட்ட ஆட்சியரின் ஆய்வுக்கு பின்னால் உலகறிகிறது, அந்த கிராமத்திலேதான் இரட்டை குவளை முறை இன்றும் அமுலில் இருந்திருக்கிறது.

பட்டியல் இனத்தைச் சார்ந்த மக்கள் கோவிலுக்குள் நுழைய மறுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே தடுக்கப்பட வேண்டிய தீண்டாமை கிராம நிர்வாக அலுவலர், வார்டு உறுப்பினர், ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றிய கவுன்சிலர் என அனைவராலும் வேடிக்கை பார்க்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரான தீண்டாமை அனுசரிக்கப்படுவதை அனுமதித்த அனைவருமே குற்றவாளிகள்.

தீண்டாமையை ஒழிக்க பள்ளிக்கல்வித்துறை சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கிறது. சாதிய வேற்றுமைகளை மனதளவிலிருந்து விரட்ட வேண்டும் என்று தீண்டாமைக்கு எதிரான பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும்.

இன்றும் கூட தமிழ்நாட்டின் பள்ளிகளில் சாதிரீ தியான பாகுபாடுகள், சாதி ரீதியாக மாணவர்களிடம் பழகும், வன்மத்தோடு நடக்கும் ஆசிரியர்கள், சாதியாக மாணவர்களை வழிநடத்தும் ஆசிரியர்கள் என்ற செய்திகளை கேட்ட வண்ணம் இருக்கிறோம்.

பிற்போக்கு சக்திகள், தமிழ்நாட்டின் பள்ளியில் குழந்தைகளை நமஸ்தே சொல்ல சொல்லுவது, காயத்ரி மந்திரம் பாடச் சொல்லுவது, சாதிய அடுக்கு முறைகளைப் பற்றி பாடத்திட்டம் ஏற்படுத்துவது, ஆன்மீகமே விடுதலை என்பது போலான தோற்றத்தை மாணவர்கள் மத்தியில் கற்பித்து வருகிறது.

குறிப்பாக திருச்சி திருவெறும்பூர் பொதுத்துறை நிறுவனமான BHEL தொழிற்சாலை வளாகத்தில் உள்ள BHEL மெட்ரிக் பள்ளியையும், RSK-CBSE பள்ளியையும் ஒப்பந்த அடிப்படையில் நிர்வகிக்க வந்த தயானந்த ஆங்கிலோ வேதிக் கல்வி நிறுவனம் (DAV), ஆங்கில வழிப் பள்ளிகளான இவ்விரண்டு பள்ளிகளில், தமிழ் இரண்டாம் மொழியாக இருக்க, சம்பந்தமே இல்லாத சமஸ்கிருத மொழியில் மாணவர்களிடம் நமஸ்தே சொல்லச் சொல்லி திணித்திருக்கிறது,

மதசார்பற்ற, பொதுவான இறை வழிபாட்டு பாடல் இருந்ததை மாற்றி, காயத்ரி மந்திரத்தை வழிபாட்டு முறையாக கடைபிடிக்கிறது. மாணவர்களின் சீருடைகளில் சமஸ்கிருத மொழியில் "ஓம்" என்று அச்சிட்டிருக்கிறது, அக்கல்வி நிறுவனத்துக்கு என ஒரு பாடலை பாடத்திட்டத்தில் வைத்திருக்கிறது. "DAV பள்ளியில் சேர்ந்திடலாம் என்று துவங்கும் அந்த பாடலின் ஒரு வரியில் வேதங்கள் நன்றாய் படித்திடலாம்" என்று சொல்லுகிறது.

நமஸ்தே கூடாது என்று மாணவர் பெருமன்றம் நடத்திய போராட்டத்தின் விளைவாக நடத்தப்பட்ட அமைதி பேச்சு வார்த்தையில் நாங்கள் திணிக்கவில்லை மாணவர்களே நமஸ்தே சொல்கிறார்கள் என்று முதன்மை ஆசிரியர் பதிலளிக்கிறார். காயத்ரி மந்திரம் குழந்தைகளின் கல்வியை மேம்படச் செய்யும், அது மதம் சார்ந்ததல்ல என்று கூறுகிறார். இப்படியாக மாணவர்களை தீவிரமாய் தீண்டுகிறது பிற்போக்குத்தனம்.

தமிழகத்தின் பாட நூல்களில்
தீண்டாமை ஒரு பாவச் செயல்,
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்,
தீண்டாமை ஒரு மனிதத் தன்மையற்ற செயல்
என்ற மதிப்புமிக்க பொன்மொழிகள் பதிவிடப்பட்டு வந்தது. ஆனால் இன்று பாட புத்தகங்களில் அவ்வரிகளும் கூட இல்லை.

குழந்தைகள் மீதான வன்கொடுமைகளுக்கு எதிராக நல்ல தொடுதல், தவறான தொடுதல் என்பது குறித்த பாடத்திட்டம் கொண்டுவரப்பட்டு, வகுப்புகளில் கற்பிக்கப்பட்டு, தேர்வுகளில் கேள்விகளாக கேட்கப்பட்டு மாணவர்களுக்கு மதிப்பும் கொடுக்கப்பட்டு வருகிறது. மதிப்புள்ள பக்கங்களில் பாடத்திட்டமாக இருப்பதால் மாணவர்களும் அதனை கற்கிறார்கள், புரிந்து கொள்கிறார்கள். அரசினுடைய இந்த முயற்சி குழந்தைகளின் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

அதுபோல் தீண்டாமைக்கு எதிரான பாடத்திட்டம் பள்ளிகளில் கொண்டு வரப்பட வேண்டும். தீண்டாமையால் மனிதர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள், அதை ஒழிப்பதற்காக தீவிரமாக செயல்பட்ட தலைவர்கள், தீண்டாமையை கண்டித்து நடத்தப்பட்ட பெரும் போராட்டங்கள், மனிதனை மனிதனாய் பார்ப்பதற்கான அவசியம், குறித்து பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். எந்த மத ரீதியான பின்பற்றுதலும் கல்வி நிலையங்களை தீண்டாமல் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,

முற்போக்கு சிந்தனையில் மேலோங்கியிருக்கும் தமிழ்நாட்டில், தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை இதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். பள்ளிக்கல்வியின் மூலம் மாணவர்களை விழிப்படையச் செய்து, சகோதரத்துவத்தை, மனிதத்தை மீட்டெடுக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும். முற்போக்காளர்கள் நாம் தொடர்ந்து பள்ளிப்பாடத்தில் தீண்டாமை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பாடத்தை கொண்டுவர உழைக்க வேண்டும்.

மாணவர்களை தீப்பந்தங்களாக்குவோம்
தீண்டாமையை வேரோடு தீயிடுவோம்.

தொடர்புக்கு: 8072990871

# பகல் கனவில் மிதக்கும் அண்ணாமலை

பாஜகவின் ஆன்மீகம் மற்றும் ஆலய மேம்பாட்டு பிரிவினர் நடத்திய 'போராட்டத்தில் கலந்து கொண்ட பாஜக தமிழ்நாடு தலைவர் கே.அண்ணாமலை "தமிழ்நாட்டில் பாஜக ஆட்சி அமைந்தால், இந்து சமய அறநிலையத்துறையை நீக்குவதற்கு தான் முதல் கையெழுத்து போடும்" என வாய்ச் சவடால் அடித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு நூறு ஆண்டுகள் தாண்டிய வரலாறு இருக்கிறது.

கடவுள்களின் பெயரிலும், சாஸ்திரங்கள் வழியிலும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்த சிறு கும்பலின் பிடியில் இருந்த ஆலயங்களையும், அதன் சொத்துக்களையும் மீட்பதற்கு நீதிக்கட்சி ஆட்சி காலத்தில், இந்து சமய அறநிலைய வாரியம் அமைக்கப்பட்ட வரலாற்றை அண்ணாமலை கற்றுணர வேண்டும்.

கோயில் மனைகளில் குடியிருந்து வருபவர்களும், நிலங்களை உழுவடை செய்து வரும் குத்தகை விவசா யிகளும் தான் கோயில் சொத்துக்களை சேதாரம் இல்லாமல் பாதுகாத்து வருகின்றனர்.

கோயில் நிர்வாகத்தில் ஊடுருவியுள்ள மத அடிப்படைவாதிகளும், சனாதான சக்திகளும் கடவுள் சிலைகளை கடத்துவது, நகை, பணம் போன்றவைகளில் கையாடல் செய்வது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ள கோயில் சொத்துக்களை திமுக அரசு மீட்டு வரும் செய்தியால், ஆத்திரமடைந்த சுயநல சக்திகளின் உணர்வுகளை அண்ணாமலை பிரதிபலித்து, பகல் கனவு காண்கிறார். அவரது எண்ணம் ஒரு போதும் நிறைவேறாது.

தலைமுறை, தலைமுறையாக கோயில்மனைகளில் குடியிருந்து வருபவர்கள் மற்றும் கோயில் நில குத்தகை விவசாயிகள் நில உரிமையை உறுதி செய்ய வேண்டும் எனப் போராடி வரும் நிலையில், இந்து சமய அறநிலையத் துறையை நீக்க வேண்டும் என்பது திசைதிருப்பும் உள்நோக்கம் கொண்ட வஞ்சகக் குரல் என்பது இயல்பான ஆன்மீகவாதிகளுக்கு எளிதில் புரியும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரி வித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



# தொண்டால் பொழுதளந்த உத்தமத் தோழன்

# ஆர்.எச்.நாதன்

ந.சேகரன்

இந்தியக் கம்யூ.கட்சியின் முதுபெரும் தலைவரும், தமிழ்நாடு ஏஐடியூசி செயலாளராகவும் விளங்கிய அருமைத் தோழர் ஆர்.எச்.நாதன் வாழ்ந்ததோ 60 ஆண்டுகள். அதில் 50 ஆண்டுகளை பொதுவாழ்க்கையில் சிறைவாசம், தலைமறைவு வாழ்க்கை என் வாழ்ந்து வீர தியாக சரித்திரம் படைத்தவர்தான் ஆர்.எச். நாதன்.

**இளமையிலேயே போராட்ட உணர்வு**

ஆர்.எச்.நாதனின் முழுப்பெயர் "ஆர். ஹாலஸ்ய நாதன்" என்பதாகும். 1920 ஆண்டில் காரைக்குடி அமராவதிபுதூரில் பிறந்தார். இளம் வயதிலேயே நாட்டு விடுதலைக்காக தீவிரமாக போராடியவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டார். காரைக்குடியில் எஸ்.எம். எஸ். உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, அன்றைய கவர்னர் வில்லிங்டன் , காரைக்குடிக்கு வருகை தந்த பொழுது, வரவேற்புப் பந்தலுக்கு "தீ" வைத்து கொளுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, கடுமையான கசையடியை பெற்றார்.

தனது 11 ஆவது வயதிலேயே" சட்ட மறுப்பு" இயக்கத்தில் குதித்ததின் மூலம் தனது அரசியல் பிரவேசத்தைத் துவக்கி விட்டார்.

**மலேசியா வாழ்வும் தொழிற்சங்கப் பணி துவக்கமும்**

குடும்பச்சூழல் காரணமாக தோழர் ஆர்.எச்.நாதன், பெற்றோருடன் மலேசியா வுக்கு சென்று வாழ நேரிட்டது.



மலேசியாரவில் தடை செய்யப்பட்டு, தலைமறைவாக இயங்கிக் கொண்டிருந்த மலேசியா கம்யூனிஸ்ட் கட்சியில்( இந்தியப் பிரிவு) இணைந்து பணியாற்றினார். மலேசியாவில் முதன் முறையாக தோட்டத் தொழிலாளர்களையும், துறைமுகத் தொழிலாளர்களையும் இணைத்து, அவர்களது பொருளாதா வாழ்க்கை முன்னேற்றத்திற்காக 1938–39 இல் மாபெரும் போராட்டத்தை துவக்கினார். அப்போது அவருக்கு வயது 18. இந்த போராட்டத்தின் விளைவாக மலேசியாவில் உள்ள "சிலாங்கூர்" என்ற மாகாணமே ஸ்தம்பித்துப் போனது.

**கம்யூ.க்களை உருவாக்குதல்**

மலேயா சாம்பசிவம், மலேயா கணபதி, வீரவர்மன் மற்றும் சென்னை துறைமுகத் தலைவரான எம்.பொறைக்கலம் போன்ற தீரமிக்க ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட் தோழர்களை உருவாக்கிய பெருமை தோழர் ஆர்.எச்.நாதனைச் சாரும்., தஞ்சை தியாகி இரண்யன், மலேசியாவில் ஆர்.எச்.நாதனால் உருவாக்கப்பட்டவர் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. தோழர் ஆர்.எச்.நாதன் அன்றைய காலத்திலே மாதம்ரூ.1500 சம்பளத்தில் வேலை பார்த்தார். பணிபுரிந்துக் கொண்டே, தொழிலாளர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டினார்.

1938–39 ஆண்டுகளில் தீவிர தொழிற்சங்க அரசியலில் ஈடுபட்டதால், அன்றைய வெள்ளை அரசால் பொய் குற்றச்சாட்டுக்கள் பேரில், 1939 இறுதியில் ,இலங்கை நாட்டிற்கும் பின் விமானத்தில் ஏற்றி இந்தியாவில் கல்கத்தாவிற்கும் 1941ல் நாடு கடத்தப்பட்டார். அங்கிருந்து வேலூர் சிறையில் அடைத்தனர்.

வேலூர் சிறையிலதான் ஏ.கே.கோபாலன், காசா சுப்பாராவ், பி.எஸ்,ஆர், பாலதண்டாயுதம் ,சங்கரையா ஆகியோருடன் ஏற்பட்ட தொடர்பு, தமிழகத்தின் அரசியல் இய்ககத்தில் முனைனைவிட முனைப்போடு அவரை இயங்க வைத்தது.

**"ஜனசக்தி" யில் பணி**

1946–48 ஆண்டுகளில் "ஜனசக்தி" ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். மார்க்சீய தத்துவார்த்த கட்டுரைகளையும், தொழிற்சங்க கட்டுரைகளையும் எழுதினார்.

1948 இல் காங்கிரஸ் அரசு கம்யூனிஸட் கட்சியின் மீது கொடிய அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டிருந்த காலம். அந்த கால கட்டத்தில் தலைமறைவாக இருந்துக்கொண்டே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியையும், ஏஐடியூசி தொழிற்சங்கத்தையும் விவசாய சங்கத்தையும் கட்டி வளர்த்தவர். இராமநாதபுரம் மாவட்ட முப்பெரும் தலைவர்களாக ஆர்.எச்.நாதன், எம்.வி.சுந்தரம், எம்.ஆதிமூலம் ஆகியோர் கம்யூனிஸ்ட் இயக்கத்தையும், தொழிற்சங்க இயக்கத்தையும், விவசாய சங்கத்தையும் கட்டி வளர்த்தனர்.

"மார்க்சிம் கார்க்கியின் கடிதங்கள்" என்ற சிறந்த நூலை தமிழாக்கம் செய்தமைக்காக, தோழர் ஆர்.எச். நாதனுக்கு சோவியத் நாடு இதழின் சார்பாக "நேரு நினைவுப் பரிசு" வழங்கப்பட்டது.

இந்திய சுதந்திரத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி, தனது இறுதி மூச்சு வரை பஞ்சாலை தொழிலாளர்களுக்காக, மீனவர்களுக்காக, விவசாயிகளுக்காக, விவசாயத் தொழிலாளர்களுக்காக, கைத்தறி நெசவாளர்களுக்காக ஆர்.எச். நாதன் போராடத் துவங்கிறார் என கேள்விப்பட்டாலே, அதிகார வர்க்கமும். அரசும் அலறிப் புடைத்துக்கொண்டு தோழர் ஆர்.எச். நாதனை நோக்கி ஓடி வருவர்.

**24 நாட்கள் உண்ணாவிரதம்**

1967 ஆம் ஆண்டில் , சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் விவசா யிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டனர். அதற்கு தலைமை ஏற்ற ஆர்.எச்.நாதன் தொடர்ந்து 24 நாடகள் உண்ணாவிரதம் இருந்தார். இறுதியில் அரசு இறங்கி வந்தது. விவசா யிகளின் கோரிக்கைகளை ஏற்று, மாவட்ட ஆட்சியர் ஒப்பந்தம் செய்த பின்புதான் உண்ணாவிரதத்தை முடித்தார். இந்த போராட்டத்திலிருந்தே அவரது உடல்நிலை வெகுவாக பாதித்துவிட்டது.

மறைவும் எம்ஜிஆரின் அஞ்சலியும்

தன்னலம் பாராது மக்கள் நலனே, தொழிலாளர் நலனே தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த அவர் 1980 ஆண்டு ஜனவரி 27 ம் நாள் இறுதி மூச்செய்தினார். மறைவை கேள்விப்பட்ட அனைத்து கம்யூனிஸ்ட் தலைவர்களும் இறுதி அஞ் சலி செலுத்தியது மட்டுமல்ல, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் . சட்ட மேலமைத் தலைவர் ம.பொ.சி, ஆகியோரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**(43 ஆண்டுநினைவு நாள் ஜனவரி, 27)**

**தொடர்புக்கு: 94431 20051**

மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை 2 காலிப்பணியிடங்களை

# மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிட வேண்டும்

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கோரிக்கை

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் ஜி.ஆர் .இரவீந்திரநாத், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச்சங்க அகில இந்திய துணைத் தலைவர் பி.காளிதாசன், இரண்டாண்டு (DMLT GRADE II)பட்டய பயிற்சி நிறைவு செய்த மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் நலச்சங்க மாநில செயலாளர் சி.முருகேசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை2 பணிகளுக்கு, அரசு மருத்துவமனைகளில் உள்ள 3000 ற்கும் மேற்பட்ட காலிப் பணி யிடங்களை ,மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்(MRB) மூலமாக, எழுத்து தேர்வு வைத்து, காலமுறை ஊதியத்தில் நிரப்பிட வேண்டும்.

மதிப்பெண்(Weightage Mark) அடிப்படையில் பணியிடங்களை நிரப்ப வழிவகுக்கும், அரசாணை எண் 401 ஐ ரத்து செய்ய வேண்டும்.

மாநில அளவில் பதிவு மூப்பு அடிப்படையில், ஆய்வக நுட்புநர் நிலை 2 பணியிடங்கள் நிரப்பும் நடைமுறை கடந்த 2017 ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது.

அரசாணை 401 படி 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, மற்றும் டிப்ளமோ DMLஜி படிப்புகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் பணியிடங்களை நிரப்ப வழிவகை செய்யப்பட்டது. இந்த weightage mark முறையில் மதிப்பெண்கள் (fixed) நிலையாக இருப்பதால், improvement வாய்ப்பு மறுக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் ஏராளமான lab technicianகள், அரசுப் பணிக்குச் செல்லும் வாய்ப்பு மறுக்கப்படும் நிலைஉள்ளது.இது ஊழல்முறைகேடுகளுக்கு வழிவகுக்கிறது. மேலும், மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை 2 நியமனத்தில் சம வாய்ப்பும் வழங்கப்படவில்லை.எனவே, weight age mark முறையை ரத்து செய்துவிட்டு, எழுத்துத் தேர்வு முறை மூலம் பணி நியமனம் செய்திட வேண்டும்.

கடந்த அக்டோபர் மாதத்தில் புதிதாக தொடங்கப்பட்ட 11 அரசு மருத்துவக் கல்லூரிகளில், கல்லூரி முதல்வர்கள் மூலம் தோராயமாக 500 பணியிடம் நிரப்பப் பட்டது.

நியமிக்கப்பட்டவர்களுக்கு ரூபாய் 13,000 முதல் ரூபாய் 15,000 ரூபாய் வரை தொகுப்பூதியம் வழங்கப்படுகிறது. இட ஒதுக்கீடும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இது சமூக நீதிக்கு எதிரானது. எனவே,தற்காலிக பணிநியமனங்களை கைவிட வேண்டும் . நிரந்தர அடிப்படையில் மட்டுமே பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையின் அடிப்படையில், மருத்துவ ஆய்வக நுட்புநர்களுக்கான, கவுன்சிலை உடனடியாக அமைத்திட வேண்டும்.

மருத்துவத்துறை பணி நியமனங்களில், மாநில உரிமையை காப்பாற்ற, தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

தமிழ்நாடு அரசின் மருத்துவமனைகளில், நோயாளிகள் மற்றும் படுக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மருத்துவ ஆய்வக நுட்புநர்களுக்கான புதிய பணியிடங்களை உருவாக்க வேண்டும்.

எம்.ஆர்.பி, கோவிட் செவிலியர்களின் பணிநீக்க உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

டயாலிசிஸ் டெக்னீசியன்கள்,ரேடியோ தெரப்பிஸ்ட்டுகளையும் எம்.ஆர்.பி மூலமே நிரந்தர அடிப்படையில் நியமிக்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.












1 ம் பக்கத் தொடர்ச்சி

தேனி,திண்டுக்கல்,நாமக்கல், கரூர், சேலம் மாவட்டங்களின் தலைநகர்களிலும், சேலம் மாவட்டம் சேலம், மேட்டூரிலும், ஈரோடு மாவட்டம் ஈரோடு, தாளவாடி, சத்தியமங்கலம், கோபி, பவானி, பெருந்துறையிலும், திருப்பூர் மாவட்டம் திருப்பூர், தாராபுரம், பல்லடம், அவிநாசி, ஊத்துக்குளியிலும் கோவை மாவட்டம் கோவை, சூலூர், பொள்ளாச்சி, வால்பாறை, மேட்டுப்பாளையத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர், தேன்கனிக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டம் தருமபுரி, நல்லம்பள்ளியிலும் மறியல் நடைபெற்றது.

இப்போராட்டத்தின் போது 7000 த்துக்கும் அதிகமான பெண்கள் உட்பட 15,000 பேர் கைது செய்யப்பட்டனர். அது குறித்த விவரம் வருமாறு:

**சென்னை**: குறளகம் அருகிருந்து பேரணி புறப்பட்டு தொலைபேசி நிலையம் முன்பு தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி தலைமையில் மறியல் நடைபெற்றது. பாஸ்கர், மு.சம்பத் (மத்திய சென்னை) அருள் (வடசென்னை) அழகேசன் (தென் சென்னை) எஸ்.குப்பன் உள்பட முன்னூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பெண்கள் உட்பட 100 பேர் கைதாகினர்.

**திருப்பூர்**: தாராபுரத்தில் கே.சுப்பராயன் எம்.பி. தலைமையில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் 850 பெண்கள் உட்பட 1200 பேர் கைதாகினர்.

**நாகப்பட்டினம்**: எம்.செல்வராசு எம்.பி தலைமையில் 500 பேர் கைதாகினர்.

**கிருஷ்ணகிரி**: ஒசூரில் டி.ராமச்சந்திரன் எம்எல்ஏ தலைமையில் 1000 பேர் கைதாகினர்.

**திருவாரூர்**: க.மாரிமுத்து எம்எல்ஏ தலைமையில் 150 பேர் கைதாகினர்.

**திருச்சி**: தேசிய செயலாளர் வஹிதா நிஜாம் தலைமையில் 150 பேர் கைதாகினர்.

**மதுரை**: மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையில் 66 பேர் கைதாகினர்.

**செங்கல்பட்டு**: மாநில பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் தலைமையில் 79 பேர் கைது.

**சேலம்**: நா.பெரியசாமி எக்ஸ்.எம்எல்ஏ தலைமையில் 164 பேர் கைதாகினர்.

**கோவை**: எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்எல்ஏ தலைமையில் 150 பேர் கைது.

**தஞ்சை**: எஸ்.சந்திரகுமார் தலைமையில் 50 பேர் கைதாகினர்.

**கும்பகோணம்**: ஆர்.தில்லைவனம் தலைமையில் 130 பேர் கைதாகினர்.

**திண்டுக்கல்**: ஆர்.ஆறுமுகம் தலைமையில் 450 பேர் கைதாகினர்.

**தருமபுரி**: எஸ்.சின்னசாமி தலைமையில் 250 பேர் கைதாகினர்.

**நெல்லை**: ஆர்.சடையப்பன் தலைமையில் 101 பேர் கைதாகினர்.

**அவிநாசி**: என்.சேகர் தலைமையில் 149 பேர் கைது.

**திருவண்ணாமலை**: வி.ஆதிமூலம் தலைமையில் 200 பேர் கைதாகினர்.

**ஆரணி**: ஆரணி அண்ணா சிலை அருகில் இருந்து மாவட்ட துணை தலைவர் குப்புரங்கன் தலைமையில் ஊர்வலமாக கோஷங்கள் எழுப்பி சென்றனர். ஆரணி பழைய பஸ்நிலையம் மணிகூண்டு அருகே மறியலில் ஈடுபட்ட அனைவரையும் போலீசார் கைது செய்தனர்.

**கோத்தகிரியில்** ராஜு தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்ட பெண்கள் உள்பட 54 பேர் கைது செய்யப்பட்டனர். அங்கன்வாடி, ஆஷா, ஊராட்சி, தேயிலை தோட்டம் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்கள், தூய்மை பணியாளர்கள் கோத்தகிரி பஸ் நிலையம் பகுதியில் சாலையின் நடுவே அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மறியல் போராட்டம் காரணமாக சற்று நேரம் கோத்தகிரி பஸ் நிலையம் பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

**சேலம்** ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற போராட்டத்தில் மாநிலத் துணைத்தலைவர் என்.பெரியசாமி முன்.எம்எல்ஏ, சிபிஐ மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் ஆகியோர் தலைமையில் 350க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். டவுன் போலீசார், 62 பெண்கள் உட்பட, 166 பேரை கைதாகினர்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு மாநில துணைத்தலைவர் என்.செல்வராஜ், மாவட்டச்செயலாளர் தனசேகரன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. திருச்செங்கோடு டிஎஸ்பி மகாலட்சுமி தலைமையில் போலீசார் 550 பேரை கைது செய்து விடுவித்தனர்.

**திருப்பூர்**: திருப்பூர், தாராபுரம், உடுமலை ஆகிய பகுதி களில் சாலை மறியல் போராட்டம் நடை பெற்றது. குமரன் சிலை முன்பிருந்து மாவட்டச்செயலாளர் பி.ஆர். நடராஜன் தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டு தலைமை தபால் நிலையம்

## ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பிரச்சாரக் குழு

### இரா.முத்தரசன் பேட்டி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

பா.ஜ.க., முன் வைக்கும் ‘ஒரே நாடு: ஒரே தேர்தல்’ என்ற கோஷம் நடைமுறை சாத்தியமற்றது. அவ்வாறு மாநிலங்களின் சட்டமன்றங்களையெல்லாம் கலைத்து விட்டு அனைத்துக்குமே நடைபெறவிருக்கும் பாராளுமன்ற பொதுத் தேர்தலுடன் சேர்த்து ஒன்றாக தேர்தல் நடத்துவதென்பது நடைமுறையில் சாத்தியம் இல்லை என்பது பா.ஜ.க.,வுக்கும் நன்கு தெரியும். ஆனாலும் இவ்வாறு கூறுவது உள்நோக்கம் கொண்டது; ‘ஒரே நாடு; ஒரே கட்சி’ என்ற நிலைமையைக் கொண்டு வரும் முயற்சியே ஆகும். ஜனநாயகத்திற்கு விரோதமான இந்த நிலைப்பாடு ஏற்புடையதல்ல. இதனை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் அனைவரும் நிராகரிக்க வேண்டும்.

மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசின் பொருளாதாரக் கொள்கைகள், குறிப்பிட்ட சிலரின் பொருளாதார வளர்ச்சிக்கு தான் உதவிகரமாக இருக்கிறதே தவிர, ஏழை எளிய நடுத்தர மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு




வழிவகுப்பவையாக இல்லை.

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெராவின் மறைவு மிகவும் துக்ககரமானது. மிகுந்த வேதனை அளிக்கக்கூடியது. அவர் சிறப்பாக பணியாற்றி வந்தார்; தொகுதி மக்களின் பேரன்பைப் பெற்றிருந்தார். அவரின் மறைவைத் தொடர்ந்து காலியாக உள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டு விட்டுள்ளது. திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் இத்தொகுதியில் மீண்டும் போட்டியிடும் வாய்ப்பு காங்கிரசுக்கே அளிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டணியின் தலைவர்களுடன் கலந்து பேசி இக்கூட்டணி சார்பில் போட்டியிடும் வாய்ப்பை கூட்டணி தர்மத்தின் அடிப்படையில் காங்கிரசுக்கு அளித்து இக்கூட்டணியின் தலைவரும், மாநில முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதன்படி ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் எங்களின் கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரின் வெற்றிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுவீச்சில் பாடுபடும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கட்சியின் ஈரோடு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் பிரச்சாரக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இத்தொகுதிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் வாக்குச் சேகரிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும். அது தவிர, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய தலைவர்கள், மாநில தலைவர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்கள் ஆகியோரும் பிரசாரம் செய்யவுள்ளனர். இவ்வாறு இரா.முத்தரசன் பேட்டியில் தெரிவித்தார்.

பேட்டியின் போது கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.சின்னசாமி, பொருளாளர் என்.ரமணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.






முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 81 பெண்கள் உட்பட 191 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

**தாராபுரம்:** திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமையில் தாரா புரம் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்று அமராவதி ரவுண்டானா சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். இதில், பி.ரகுபதி, லட்சுமணன். செயலாளர் ரவி, மலையாண்டி உட்பட மறியலில் ஈடுபட்ட 1200 க்கும் மேற்பட்டவர்களை போலீசார் கைது செய்தனர்.

**உடுமலை:** மத்திய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற சாலை மறியல் போராட்டத்திற்கு ஏஐடியுசி மாநில பொதுக்குழு உறுப்பினர் சௌந்திரராஜன் தலைமை வகித்தார். இசாக், சுப்பிரமணியம், ரணதேவ், கிருஷ்ணசாமி மற்றும் ராஜேந்திரன் உள்ளிட்ட திரளானோர் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர். 48 பெண்கள் உட்பட 230 பேர் கைது செய்யப்பட்டனர்.

**பல்லடம்:** மறியல் போராட்டத்திற்கு ஜி.ரவி தலமையேற்றார். மறியலில் ஈடுபட்ட 19 பெண்கள் உட்பட 72 பேர் கைது செய்யப்பட்டனர். அது போல் அவிநாசியில் மாநில செயலாளர் என்.சேகர் தலைமையில் நடைபெற்ற மறியல் போராடட்த்தில் 86 பெண்கள் உட்பட் 149 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஊத்துக்குளியில் மாவட்டத்தலைவர் எம்.மோகன் தலைமையில் 63 பெண்கள் உட்பட 102 பேர் மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர்.

**காஞ்சிபுரம்:** மாநில துணைத்தலைவர் முன்னாள் எம்.எல். ஏவுமான ஏ.எஸ்.கண்ணன் தலைமையில் காஞ்சிபுரம் காந்தி ரோடு தேரடியில் மறியல் போராட்டம் நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்ட துணை தலைவர் கார்த்தி, மாவட்ட பொது செயலாளர் மூர்த்தி உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர். 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

**நெல்லை** வண்ணார்பேட்டையில் நடந்த சாலை மறியல் போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஆர். சடையப்பன் தலைமை தாங்கினார். சிபிஐ மாவட்ட செயலாளர் லட்சுமணன் முன்னிலை வகித்தார். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இதில் ஈடுபட்ட 101 பேரை போலீசார் கைது செய்தனர்.

அம்பை பூக்கடை பஜாரில் நடந்த போராட்டத்திற்கு முருகன் தலைமை தாங்கினார். மறியலில் ஈடுபட்ட 36 பெண்கள் உள்பட 100 பேரை போலீசார் கைது செய்தனர்.

வள்ளியூரில் நடந்த மறியல் போராட்டத்தில் தொழிற்சங்க நிர்வாகிகள் எம்.எஸ்.மணியன், முருகன், சேதுராமலிங்கம், கலைமுருகன், பாலன், லெனின் முருகானந்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர். மறியலில் ஈடுபட்ட 48 பேரை போலீசார் கைது செய்தனர்.

**கன்னியாகுமரி:** மாவட்டத் தலைவர் அனில்குமார் தலைமை நாகர்கோவில் மீனாட்சிபுரத்தில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. சிபிஐ மாவட்டச் செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ், கல்யாணசுந்தரம், இசக்கிமுத்து, நாராயணசாமி, அருணாசலம், சுரேஷ், மேசியாதாஸ் உள்பட மறியலில் ஈடுபட்ட 30 பேரை போலீஸார் கைது செய்தனர்.

**அருப்புக்கோட்டை,** புதிய பஸ் நிலையம் முன்பு முனியசாமி, தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்ட 64 பெண்கள் உள்பட 147 பேரை போலீசார் கைது செய்தனர்.

**நல்லம்பள்ளி:** பிரதாபன் தலைமை தாங்கி, கோரிக்கைகள் குறித்து பேசினார். மத்திய அரசு போராட்டத்தில் ஈடுபட்ட 17 பெண்கள் உள்பட 27 பேரை அதியமான்கோட்டை போலீசார் கைது செய்தனர்.

**தூத்துக்குடி:** மாவட்டம் முழுவதும் எட்டு மையங்களில் மறியல் பெண்கள் உள்ளிட்ட500க்கும் மேற்பட்டோர் கைதாகினர்.

தூத்துக்குடியில் பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு வி.தனலட்சுமி தலைமையில் சிபிஐ மாவட்ட செயலாளர் கரும்பன் உட்பட மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். 90 பெண்கள் உட்பட 130 பேர் கைதாகினர்.

கோவில்பட்டியில் பி.பாபு தலைமையில் 115 பெண்கள் உட்பட 255 பேரும்,

எட்டயபுரத்தில் சேது தலைமையில் 100 பெண்கள் உட்பட் 19 பேரும்,

குனியமுத்தூரில் மகாராஜன் தலைமையில் 25 பெண்கள் உட்பட 55 பேரும்,

விளாத்திகுளத்தில் பாலசிங்கம் தலைமையில் 39 பெண்கள் உட்பட 80 பேரும்,

பொன்னுசாமி தலைமையில் கயத்தாறு மறியலில் 11 பெண்கள் உட்பட 22 பேரும்,

நாசரேத்தில் மாவட்ட தலைவர் ஈ.கிருஷ்ணராஜ் தலைமையில் 35 பெண்கள் உட்பட 68 பேரும்,

திருச்செந்தூரில் மாவட்ட செயலாளர் லோகநாதன் தலைமையில் 62 பெண்கள் உட்பட் 135 பேரும் மறியலில் ஈடுபட்டதால் கைதாகினர்.

**செங்கல்பட்டு மாவட்டம்** மாமல்லபுரத்தில் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கல்பாக்கம் அணு மின் நிலைய தொழிற்சங்க ஸ்தாபகர் சக்கரபாணி கலந்து கொண்டார். இந்த மறியலில், துப்புரவு பணியாளர்கள், மின் ஊழியர்கள், ஆட்டோ ஓட்டுனர் தொழிற்சங்கத்தினர் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். மறியலில் ஈடுபட்ட 35 பெண்கல் உட்பட 82 பேர் கைதாகினர்.

**கரூர்:** ஜவஹர் பஜாரில் உள்ள தலைமை தபால் அலுவலகம் முன்பு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் துரைசாமி தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் நாட்ராயன், எ.ஐ.டி.யு.சி. மாவட்ட செயலாளர் ஜி.பி.எஸ்.வடிவேலன், மாவட்ட துணைச் செயலாளர் கலாராணி உள்பட பலர் கலந்து கொண்டனர். மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 102 பெண்கள் உள்பட 148 பேர் கைதாகினர்.

**தஞ்சாவூர்:** மாநிலச்செயலாளர் எஸ். சந்திரகுமார் தலைமையில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பியவாறே தபால் நிலையம் முன்பு அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கோரிக்கைகளை தமிழக அரசு உடனே நிறைவேற்ற வேண்டும் என்றும், மத்திய அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர். இதையடுத்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 50 பேரை போலீசார் கைது செய்தனர்.

கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன் நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு மாநிலச் செயலர் ஆர். தில்லைவனம் தலைமை வகித்தார். சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம்எல்ஏவுமான வை. சிவபுண்ணியம், வடக்கு மாவட்டச் செயலர் மு.அ. பாரதி உரையாற்றினர். தரைக்கடை வியாபாரிகள் சங்க மாவட்டச் செயலர் ஆர்.பி. முத்துக்குமரன், கைத்தறி சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜி. மணிமூர்த்தி உட்பட 130 பேர் கைது செய்யப்பட்டனர்.

பட்டுக்கோட்டை அஞ்சலகம் முன் நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் அ.சாமிக்கண்ணு தலைமையில் 50 பேரும் மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டனர்.

**கடலூர்:** பண்ருட்டி கும்பகோணம் சாலை தபால் நிலையத்தின் முன்பு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் வளர்மதி தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் துரை, மாவட்ட விவசாய சங்க தலைவர் சிவக்குமார், நிர்வாகிகள் பாஸ்கர், சக்திவேல், ஞானசேகர், மோகன் உட்பட மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 21 பெண்கள் உட்பட 91 பேரை பண்ருட்டி போலீசார் கைது செய்தனர்.

**சிவகாசி** பேருந்து நிலையம் முன் மாவட்டத் தலைவர் க.சமுத்திரம் தலைமையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட 150 பேரை போலீஸார் கைது செய்தனர்.

**வேலூர்** அண்ணா சாலையிலுள்ள தலைமை தபால் நிலையம் முன் முன்னாள் எம்எல்ஏ லதா தலைமையில் டாஸ்மாக், கட்டடத் தொழிலாளர், பீடி தொழிலாளர், போக்குவரத்து, கூட்டுறவு வங்கி, அமைப்புசாரா தொழிலாளர், விவசாயக் கூலித்தொழிலாளர், கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள், ஆட்டோ தொழிலாளர், துப்புரவுப் பணியாளர்கள் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். 110 பெண்கள் ,10 குழந்தைகள் உட்பட 180 பேர் கைது செய்யப்பட்டனர்.

**திருப்பத்தூர்** மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக தேசியக்குழு உறுப்பினர் எஸ்.ஆர்.தேவதாஸ் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது. திருப்பத்தூர் வழியாக வாணியம்பாடி செல்லும் இரு வழி சாலைகளிலும் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்ட 35 பெண்கள் உட்பட 215 பேர் கைது செய்யப்பட்டனர்.




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. தேசியக்குழு உறுப்பினர் க.சந்தானம் தலைமையில் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி தேசியக்கொடி ஏற்றினார். இந்நிகழ்ச்சியில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா, மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் சீ.தினேஷ் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

# டி.ராஜா சகோதரர் கண்ணதாசன் மறைவு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜாவின் சகோதரரும், வேலூர் மாவட்டம், சித்தாத்தூர் ஊராட்சியின் முன்னாள் தலைவருமான டி.கண்ணதாசன் (62) சித்தாத்தூரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தி ஆழ்ந்த வேதனையளிக்கிறது.

சித்தாத்தூரில் வசித்து வந்த துரைசாமி நாயகம்மாள் குடும்பத்தில் நான்கு சகோதர்கள், ஒரு சகோதரியுடன் பிறந்தவர் கண்ணதாசன்.

கண்ணதாசன் சித்தாத்தூரில் குடும்பத்தோடு வாழ்ந்து, பொதுமக்களின் நல்வாழ்வுக்கும், ஊர் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வந்தவர்.

மக்களின் நன்மதிப்பைப் பெற்று, ஊராட்சித் தலைவர், ரோட்டரி சங்கத் தலைவர், கூட்டுறவு வங்கி இயக்குநர் என பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றியவர்

இவருக்கு சித்ரா என்கிற மனைவியும், கே.கோகுல் என்கிற மகனும், கே.ஆனந்தி என்கிற மகளும் இருக்கிறார்கள்.

அன்னாரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரை இழந்து வாடும் தோழர் டி.ராஜா உள்ளிட்ட அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### தலைவர்கள் அஞ்சலி

டி.கண்ணதாசன் மறைவு செய்தி அறிந்து டெல்லியிலிருந்து டி.ராஜா பள்ளிகொண்டா வந்து மறைந்த தம்பியின் உடலுக்கு மரியாதை செய்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார். இறுதி ஊர்வலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன், ஏஐடியூசி மாநில தலைவர் காசி விஸ்வநாதன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவீந்திரநாத், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ஜி.லதா எக்ஸ்.எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் துரை செல்வம், நகர செயலாளர் ஆனந்தன், சிபிஎம் கட்சி தோழர்கள் சாமிநாதன், குணசேகரன் மற்றும் மாற்று கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்

# கு.ராமகிருஷ்ணன் மனைவி மறைவு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்**

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை கு.ராமகிருஷ்ணன் வாழ்விணையர் வசந்தி தேவி (59) கோவையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.

மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும், பகுத்தறிவுக் கருத்துக்களையும் தீவிரமாக பரப்புரை செய்த தோழர் கு.ராமகிருஷ்ணன் பொதுவாழ்வுக்கு பெரிதும் துணை நின்றவர் வசந்தி, அவரது மறைவு பெரும் வேதனையளிக்கிறது. அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும், கு.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# குடியரசு தின ஆளுநர் மாளிகை தேநீர் விருந்து புறக்கணிப்பு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு**

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை ஆர்எஸ்எஸ் மதவெறி கும்பலிடமிருந்து பாதுகாத்திட ஜனவரி 26ம் தேதியை “இந்திய அரசியல் அமைப்புச்சட்ட பாதுகாப்பு உறுதிமொழி ஏற்பு” தினமாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி ஜனவரி 26ம் தேதியன்று குடியரசு தினத்தையொட்டி ஆளுநர் மாளிகை தேநீர் விருந்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழுவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

“தமிழ்நாடு ஆளுநர்” என்று அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தாலும், அவர் தன் அரசியல் அமைப்புச் சட்ட கடமைகளை நிறைவேற்றவில்லை. தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ள 20க்கும் மேற்பட்ட மசோதாக்கள் ஆளுநரால் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து அவர் ஆர்.எஸ்.எஸ். சார்பு கருத்துக்களையே பேசி வருகின்றார்.

எனவே, அவர் அழைப்பு விடுத்துள்ள தேநீர் விருந்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு புறக்கணிக்கின்றது. மேலும் ஜனவரி 26ம் தேதியன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனைத்து கிளைகளிலும் தேசியக் கொடியை ஏற்றி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை பாதுகாக்கும் உறுதி மொழி ஏற்பு நிகழ்வு நடைபெறும் என்பதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு அறிவிக்கின்றது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஜீவாவின் 60ம் ஆண்டு நினைவுநாள்

மறைந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமரர் ஜீவா அவர்களின் 60 ம் ஆண்டு நினைவு நாள் கருத்தரங்கம், கோவை கிழக்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பில் பீளமேடு பாலநகரில் எஸ்.கே. அரங்கத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய கவிஞர் ரவீந்திர பாரதி, “ஜீவா ஒரு மகா சிறந்த கவிஞர், பேச்சாளர். அவர் ஆண்டுதோறும் நடைபெறும் கம்பன் விழாவில் பேசும்போது கம்பனே நேரில் வந்து பேசுவதாக வருணிக்கப்பட்டார்.

இலக்கியத்தில் மட்டுமல்ல தொழிலாளர்களுக்காக போராடுவதிலும், தொழிற்சங்க பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டார்.

1935 ஆம் ஆண்டு கோவை டவுன்ஹால் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஜீவாதான் சிறப்பு பேச்சாளர், கூட்டத்தை கேட்பதற்காக 15000 மேற்பட்ட தொழிலாளர்கள் திரண்டு இருந்தார்கள். துப்புரவு தொழிலாளர்கள் மில் தொழிலாளர்கள், விவசாயக் கூலி தொழிலாளர்கள் என தொழிலாளர்களாக திரண்டு இருந்தார்கள்.

அந்த மேடையிலே சம்பந்தமில்லாத ஒருவர் ஏறி, ஜீவா சாமி இல்லை என்று சொல்லுகிற கட்சியைச் சேர்ந்தவர். நாம் கடவுள் உண்டு என்று சொல்லுகிறவர்கள். எனவே, ஜீவாவின் பக்கம் நிற்கிறவர்கள் சாமி இல்லை என்று சொல்லுகிறவர்கள் கையை உயர்த்துங்கள் என்று மைக்கை பிடித்து கூறினார்.

கூட்டத்திலிருந்த அத்தனை பேர்களும் கடவுள் இல்லை என்று கையை உயர்த்தினார்கள். அந்த சம்பந்தப்பட்ட நபர், சாமி உண்டு என்பதற்கு ஒருவர் கூட ஆதரவு தெரிவிக்காத நிலையில் வெட்கத்துடன் வெளியேறினார். நான் இங்கே குறிப்பிடுவதற்கு காரணம். சாமி இல்லை என்று கையை உயர்த்தியவர்களில் ஒரு சிலரை தவிர, அத்தனை பேரும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள். அப்புறம் ஏன் அவர்கள் கையை உயர்த்தினார்கள் என்றால், கடவுள் உண்டு என்று கையை உயர்த்தினால் அது ஜீவாவுக்கு எதிரானதாக மாறிவிடும் என்பதால், கடவுள் இல்லை என்று அவர்கள் கையை உயர்த்தினார்கள்.



எனவே, ஜீவா இலக்கியவாதிகள் மத்தியில் மட்டுமல்ல, கற்றறிந்தவர்கள் மத்தியில் மட்டுமல்ல, தொழிலாளர்களின் இதயத்தையும் கவர்ந்தவராக இருந்தார்.

கோவையில் ஜீவா பேசுகிறார் என்றால் பத்தாயிரம் பேர், 15,000 பேர் என திரள்வார்கள் என்றும் ரவீந்திர பாரதி கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் துணை ஆட்சியர் வே. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். எஸ்.பாலச்சந்திரன் துவக்க உரை நிகழ்த்தினார். எஸ்.சண்முகம், ஜி.நாராயணசாமி, யு.கே.சுப்பிரமணியன், மாமன்ற உறுப்பினர் எம்.டி.மோகன், ஆர். ஜீவபாரதி, பேராசிரியர் ராஜேந்திரன், பேராசிரியர் தங்கம், முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஆர்.சந்திரசேகர், ஏ.பி. மணிபாரதி, பி.குணசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கே. நடராஜ் நன்றி கூறினார்.

**கும்பகோணம்:** இலக்கியப் பேராசான் ப.ஜீவா 60 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கும்பகோணம் கட்சி அலுவலகத்தில் ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.பாலன் தலைமையில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினார். கட்சியின் மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.ராஜேந்திரன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம், விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சாமு.தர்மராஜன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் ஏ.ராதாகிருஷ்ணன், டி.ஆர்.குமரப்பா, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் வக்கீல் ஐ.ஜார்ஜ், கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர்கள் ஜல்லி.எம்.ஸ்ரீனிவாசன் பா.சாமிநாதன் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் பங்கேற்று மலர் அஞ்சலி செலுத்தினர்.

**சேலம்:** சேலம் மாவட்டம், சூரமங்கலம் மண்டலம், ஜாகீர் அம்மாபாளையத்தில் உள்ள இலக்கிய பேராசான் ப.ஜீவா சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஜாகீர் அம்மாபாளையம் கிளைச் செயலாளர் பி.விஜயபாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. கட்சி கொடியினை ப.தங்கமணி ஏற்றி வைத்தார்.

மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாவட்ட துணைச்செயலாளர் எம்.ராமன், ஏஐடியுசி தேசிய குழு உறுப்பினர் எம்.முனுசாமி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மாவட்ட செயலாளர் கே.வி.ராஜேந்திரன், இஸ்கப் மாவட்ட கௌரவத் தலைவர் கே.சுவாமிநாதன், ஏ.ஐ.எஸ்.எப். மாவட்ட செயலாளர் பா.தினேஷ், ஏ.ஐ.ஒய்.எப். மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் ஜெ.கனியன் பூங்குன்றன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் என்.கே. செல்வராஜ் ஆகியோர் புகழஞ்சலி செலுத்தி பேசினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டது. மாவட்ட துணைச்செயலாளர் ஏ.கந்தன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், எம்.பாலன் உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கிளை மூத்த உறுப்பினர் ஏ.வி.முத்துவேலன் நன்றி கூறினார்.

**காஞ்சி /செங்கை மாவட்டம்:** பேராசான் ஜீவாவின் 60 ஆம் ஆண்டு நினைவு தினத்தில் தாம்பரம் ரயில் நிலையத்துக்கு எதிரில் உள்ள ஜீவாவின் முழு உருவ சிலைக்கு ,காஞ்சி செங்கை மாவட்ட குழு சார்பாக மலரஞ்சலி செலுத்தப் பட்டது.

ஜீவாவின் மகன் ஜீவா மணிக்குமார் குடும்பத்தினர், டி எம் ஜி.மார்க்ஸ் ஆனந்த், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட வர்களும், காஞ்சி மாவட்ட முன்னாள் செயலாளர் எல்.மேகநாதன், செங்கை மாவட்டக்குழுவின் தேவராஜன், ஏஐடியுசி சங்கைய்யா, கலை இலக்கிய பெருமன்றத்தின் இதழாளர் இசைக்கும்மணி, மோகன்ராம், மடிப்பாக்கம் கந்தன் , பாவலர் கீர்த்தி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு ஜீவாவின் புகழ் ஓங்குக என முழக்கமிட்டனர்.

**மணப்பாறை:** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகம் முன்பு இலக்கிய பேராசான் ஜீவாவின் 60 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரின் திருவுருவப்படத்திற்கு மலர்துவி புகழ் அஞ்சலி நகர, ஒன்றியகுழுக்கள் சார்பில் நடைபெற்றது.

நகர செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் தங்கராசு முன்னிலை வகித்தார். ஜீவாவின் திருவுருவப்படத்திற்கு முன்னாள் மாநில நிர்வாககுழு உறுப்பினர் த.இந்திரஜித், திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் பழனிச்சாமி, தங்கமணி, மாவட்ட குழு உறுப்பினர்கள் ராகமத்துனிஷா, ராஜேந்திரன், நல்லுச்சாமி, பெருமாள் மற்றும் நகர ஒன்றிய குழுக்கள் நிர்வாகிகள் மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.



## சங்கே முழங்கு!

## கோமுகி அணை நீர்வடி பகுதி ஆக்கிரமிப்பை அகற்றிடுக!

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கல்வராயன் மலை அடிவாரப் பகுதியில் பொட்டியம், கல்படை, பரங்கிநத்தம் ஆகிய கிராமங்கள் வழியாக மூன்று ஆறுகள் சங்கமிக்கும் இடமான கச்சிராயபாளையத்திலிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது கோமுகி அணை. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காமராஜரால் 1963ம் ஆண்டு ரூ.121 லட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு 2 ஆயிரத்து 200 மீட்டர்நீளத்தில்கோமுகி அணை கட்டும் கட்டுமானப் பணி தொடங்கி 1966 ம் ஆண்டு முடிக்கப்பட்டு பக்தவச்சலம் முதல்வராக இருக்கும்போது திறந்து பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

கோமுகி அணையின் நீர்வடி நீர்த்தேக்க பரப்பு 113 சதுர மைல்களை கொண்டது. வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவ மழையினால் மட்டுமே வினாடிக்கு 52 ஆயிரம் கன அடி அளவில் நீர் பெருக்கெடுத்து நிரம்புவதால் அணையின் நீர்மட்டம் மொத்த கொள்ளளவு உயரம் 46 அடி ஆகும். இந்த கோமுகி அணையின் நீர் தேக்கத் திலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் கோமுகி நதியாக ஓடுகிறது. இந்த நதியின் குறுக்கே 11 அணைக்கட்டுகள் விவசாய பாசனத்திற்காக அப்போதே அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டுகளினால் 40 ஏரிகள் தண்ணீர் பெற்று 5 ஆயிரத்து 860 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடைகிறது.

இதுமட்டும்இல்லாமல்இந்தகோமுகி அணையின் நீர்த்தேக்கத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் தேதியில் தமிழ்நாட்டின் முதலமைச்சரால் உத்தரவிடப்பட்டு மாவட்ட கலெக்டர், மாவட்ட அமைச்சரால் பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீர் அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய 5 மாதங்கள் புதிய பாசனப்பரப்பாக பதிவு செய்யப்பட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன அபிவிருத்தி பெறுகிறது. கோமுகி அணையில் தொடங்கும் இந்த நதியானது கடலூர் மாவட்டம், நல்லூரில் உள்ள மணிமுத்தா நதியில் சங்கமம் ஆகிறது. இந்த ஆற்றின் பழைய பாசனம் மூலம் வடக்கனந்தல், சோமண்டார்குடி, மாதவச்சேரி, செம்படாகுறிச்சி, மட்டிகைகுறிச்சி, ஏர்வாய்பட்டினம் ஆகிய 33 கிராமங்களும், அணையின் புதிய பாசன மூலம் வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, மாதவச்சேரி, பால்ராம்பட்டு, செல்லம்பட்டு, கரடிசித்தூர் ஆகிய 7 கிராமங்களும் பயனடைகிறது.

இந்த நிலையில் மேற்படி கோமுகி அணையின் நீர்த்தேக்க உட்பரப்பில் இதுவரை 50 ஆண்டுகளுக்கு மேலாகியும் தூர்வாரப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் மழை பெய்யும் போது வெள்ளப்பெருக்கின் மூலம் வந்து சேரும் மண் மற்றும் மணற்பரப்பு குவிந்து விடுகிறது. இதனால் நீர் பிடிப்பு அளவு குறைந்துள்ளதாகவும், மேலும் மலைச்சரிவுகளில் நீர்வடி நிலப் பரப்பினை நூற்றுக்கும் மேற்பட்டோர் காலப்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து “நொல்லையன் களத்தில் அல்லாதவன் பாக்கி இல்லை” என்னும் பழங்கால பழமொழிக்கு இணங்க ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய பாசனம் பெறும் நீர் வளம் செறிந்த பொதுப்பணித்துறை சொத்தை பெருவிவசாய செல்வந்தர்கள் சுயலாபத்துக்காக ஆக்கிரமித்து விவசாயமாக செய்து வருகின்றனர். இதனை தடுக்க வேண்டிய அதிகாரிகள் வாய் மூடிகளாக இருந்து வருகின்றனர். பாதிக்கப்படும் விவசாயிகள், விவசாய சங்கங்கள் அரசுக்கும், அதிகாரிகளுக்கும் புகார்கள் அனுப்பியும் “செவிடன் காதில் ஊதிய சங்கு போல” சத்தமின்றி உள்ளது.

விவசாயத்தை பாதுகாக்க அணையின் நீர்மட்டத்தை உயர்த்த அரசு முன்வர வேண்டும்.

மேலும் அணையை தூர்வாரி பாதுகாக்க வேண்டும் என பாசன வசதி பெறும் 50க்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். அரசு செய்ய முன்வருமா?

**– கபில்தேவ்**

**தொடர்புக்கு: 9894274211**

# நாடு தழுவிய 10 லட்சம் வங்கி ஊழியர்கள் ஜனவரி 30, 31 இரண்டு நாள் வேலை நிறுத்தம்




கடந்த ஜனவரி 12ஆம் தேதி மும்பையில் 9 சங்கங்கள் அடங்கிய வங்கி ஊழியர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வங்கியில் தற்போது உள்ள இந்திய வங்கிகளின் சங்கம் (Indian Bank’s Association) கடந்த இருதரப்பு ஒப்பந்தத்தில் பேசித் தீர்வு காண்போம் என உறுதி கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றாதது மட்டுமல்லாமல் காலம் தாழ்த்தும் போக்கு குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும் முக்கிய கோரிக்கையாக இன்றைய சூழ்நிலையில் வங்கியில் நிரப்பப்படாமல் உள்ள 2 லட்சம் காலி இடங்களில் ஊழியர்களை நியமனம் செய்யாதது குறித்தும் விவாதிக்கப்பட்டது. இவைகள் தவிர முக்கிய கோரிக்கையான புதிய பென்சன் திட்டத்தை கைவிடக் கோரியும் 12வது இருதரப்பு ஒப்பந்த கோரிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் அனைத்து வங்கி ஊழியர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு இந்த முக்கியமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக போராட முடிவெடுத்ததுள்ளது. இந்த கோரிக்கைகள் நிறைவேற்ற பல்வேறு கட்ட அளவில் நாடு தழுவிய போராட்டம் குறித்து அறைகூவல் விடுத்துள்ளது. கிளைகள் முன் போராட்டம் நடத்துவது, கோரிக்கை அட்டை அணிவது, பெருநகரங்களில் ஆர்பாட்டம் நடத்துவது இறுதியாக ஜனவரி 30, 31 ஆம் தேதி இரண்டு நாட்கள் நாடு தழுவிய வேலைநிறுத்த போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

ஏன் வங்கிகள் அடிக்கடி போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என பொதுமக்கள் நினைக்கலாம். இந்தக் கோரிக்கைகளின் நியாயங்கள் குறித்து அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர்.சி.பி.வெங்கடாசலம் அவர்கள் பத்திரிக்கைகளுக்கு கீழ்கண்ட தகவல்களை தந்துள்ளார்.

1. வாரத்தில் ஐந்து நாள் வங்கிகளின் சேவை மற்றும் சனி, ஞாயிறு விடுமுறை என அறிவிக்ககோரி மத்திய அசசை வலியுறுத்துவது கடந்த 2015ஆம் ஆண்டு முதல் வங்கிகள் மாதத்தில் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் விடுமுறை என 10வது இருதரப்பு ஒப்பந்தத்தில் முடிவெடுத்தது. அப்போது இந்த இரண்டு நாள் விடுமுறை நடைமுறையில் மேலும் அபிவிருத்தி செய்து நாளடைவில் அனைத்து சனி மற்றும் ஞா யிற்றுக்கிழமைகளில் விடுமுறை அளிப்பதற்காக உறுதி அளிக்கப்பட்டது இதுவரை இந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

2. வங்கிகளில் பென்சன் திட்டம் 1993ல் நடைபெற்ற ஒப்பந்தத்தின் வாயிலாக 1986ஆம் ஆண்டு முதல் பணியில் ஓய்வுபெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் அமல்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு வங்கியில் 7 இருதரப்பு ஒப்பந்தங்கள் நிறைவேறியது. ஆனால் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு அவர்களது ஓய்வூதியத்தில் எந்த முன்னேற்றமும் அளிக்க வங்கிகள் நிர்வாகம் முன்வரவில்லை. அவர்களது ஓய்வூதியம் இந்தகால சூழலுக்கு ஏற்ப அபிவிருத்தி செய்யவேண்டும் என முக்கிய கோரிக்கை ஒவ்வொரு இருதரப்பு ஒப்பந்தத்திலும் பேசப்பட்டாலும் இதனை ஏற்காமல் காலம் தாழ்த்தி வருகின்றது. இந்த பணி ஓய்வு பெற்ற லட்சக்கணக்கான ஊழியர்களின் எதிர்பார்ப்பு நியாயமானதாகும் இதை நிறைவேற்றக் கோரி போராட்டம் நடத்துவது அவசியமாகியுள்ளது.

3. இன்றைக்கு அனைத்து வங்கிகளிலும் தேவைக்கு ஏற்ப ஆட்கள் பணியமர்த்துவது இல்லை, சுமார் 2 லட்சம் பணியிடங்கள் காலியாக உள்ளன. வியிறி 2014ஆம் ஆண்டு தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என கூறியது. தற்போது வங்கிகளில் மட்டும் 2 லட்சம் வேலை வாய்ப்புகள் உள்ளன. இன்றைய இளைஞர்கள் வேலை கிடைக்காமல் தவிக்கின்ற நிலையில் இதுபோன்ற வாய்ப்புள்ள இடங்களில் வேலை மறுக்கப்படுகின்றது. மாறாக ஒப்பந்த முறையில் பணியமர்த்தி அவர்களுக்கு குறைந்த ஊதியத்தில் பணி மற்ற சலுகைகளை மறுப்பது, தொழிலாளர் நல சட்டங்களை நடைமுறைபடுத்தாதது, மேலும் தொழில் தாவா சட்டங்கள் போன்றவைகள் இவர்களுக்கு பொருந்தாதது. மேலும் நிரந்தரப் பணியமர்த்தினால் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் அனைத்து தரப்பினர்க்கும் வேலை வாய்ப்பு குறிப்பாக சமுதாயத்தின் பின் தங்கிய சமூகத்தினர் முன்னாள் ராணுவ வீரர்கள், மாற்று திறனாளிகள் போன்றவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்க மறுப்பது, இத்தகைய மத்திய அரசின் போக்கினை எதிர்த்து சங்கங்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதற்கு நாட்டில் உள்ள அனைத்திந்திய இளைஞர் அமைப்புகள் மற்றும் மாணவ அமைப்புகளும் தங்களது ஆதரவினை தெரிவித்தது பாராட்டத்தக்கதாகும்.

### இளைஞர், மாணவர் பெருமன்றம் பங்கேற்பு

வங்கி ஊழியர்கள் நடத்தும் இப்போராட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் மற்றும் மாணவர் பெருமன்றங்களும் இணைந்து பங்கேற்கும் என்று அறிவித்துள்ளன.

4. பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த கோருவது : வங்கியில் 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்திற்கு பதிலாக புதிய ஓய்வூதிய திட்டம் ஒன்றை அமல்படுத்தியிருந்தனர். இது ஊழியர்களிடையே ஒரு குறிப்பிட்ட சதவீத தொகையை பிடித்து அதற்கு சமமாக வங்கி நிர்வாகம் செலுத்துவது, இதனை காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக குறிப்பிட்ட தொகையை பென்சனாக வழங்குவது என்பது இன்றைய சூழ்நிலையில் ஏறிவரும் விலைவாசி, பஞ்சப்படிக்கு ஒவ்வாததாகும். எனவே பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் பல மாநிலங்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல் வங்கி ஊழியர்களுக்கும் 2010ஆம் ஆண்டிற்கு பின்னால் பணியில் சேர்ந்தவர்களுக்கும் இந்த பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

5. 12வது இருதரப்பு ஒப்பந்தம் : கடந்த அக்டோபர் மாத இறுதியில் 11வது இருதரப்பு ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது. அனைத்து வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்கனவே புதிய கோரிக்கைகளை இந்திய வங்கி சங்கத்திடம் கடந்த ஆண்டு சமர்ப்பித்துள்ளது. இது குறித்தும் உடனடியாக வங்கி ஊழியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை துவங்கவேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளது. இதற்கான பணியினை இந்திய வங்கி சங்கம் அனைத்து வங்கிகளின் சம்மதத்தை உடனடியாக பெற்று பேச்சுவார்த்தை மூலம் ஒப்பந்தம் காணவேண்டியது அவசியம். இவ்வாறு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி.பி.வெங்கடாசலம் பத்திரிக்கையாளர்கள் மூலமாக பொதுமக்களின் இந்த இரண்டு நாள் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தருமாறும் குறிப்பாக வேலையற்ற இளைஞர்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 126 பிறந்த நாள் விழா



திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள எம்ஜிஆர் நகரில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 126 பிறந்த நாளை முன்னிட்டு அவரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ் சலி நடைபெற்றது.

நிகழ்வுக்கு தேசபக்தர் சலவை தொழிலாளி பெரியசாமி தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள், அதிமுக பொன்னுச்சாமி, சமூக ஆர்வலர்கள் பாலு, சண்முகம் ஆகியோர் மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

### சுங்கர அள்ளியில் இருந்து

# வத்தல்மலை பால்சிலம்பிற்கு சாலை அமைத்திடுக!

தருமபுரி மாவட்டம், கடத்தூர் ஒன்றியம் சுங்கர அள்ளி ஊராட்சி வத்தல்மலை பால்சிலம்பு கிராமத்தில், தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க கிராம சங்க பேரவைக்கூட்டம் கிராம சங்க தலைவர்கள் தங்கராஜ், ராணிசந்திரா தலைமையில் நடைபெற்றது.

இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கலந்து கொண்டு பழங்குடி மக்களின் வாழ்வாதார நிலை குறித்து பேசினார். கூட்டத்தில் சங்க மாவட்ட துணைத்தலைவர் ஜி.ராஜகோபால், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை. மாதையன், கடத்தூர் ஒன்றிய தலைவர் ஆர்.ராமச்சந்திரன், ஒன்றிய செயலாளர் எம்.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். வத்தல்மலை பால்சிலம்பு கிராம பழங்குடி மக்கள் கிராம ஊராட்சி மன்ற அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவற்றிக்கு சங்கா அள்ளி செல்ல தருமபுரி சென்று ஒடல்சல்பட்டி, கடத்தூர் வழியாக செல்ல வேண்டியுள்ளது அதனால் வத்தல்மலை பால்சிலம்பிலிருந்து சுங்கர அள்ளி செல்ல ஏற்கனவே இருக்கும் நடைபாதையில் சாலை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெண் விவசாய தொழிலார் சங்க கிராம தலைவராக ராணிசந்திரா, செயலாளராக ராணி, பொருளாளராக சரோஜா, துணைத்தலைவராக மாதம்மாள், துணைச்செயலாளராக சித்தரா ஆகியவர்களும், பால்சிலம்பு கிராம சங்க தலைவராக தங்கராஜ், செயலாளராக அழகுதுரை, பொருளாளராக சந்திரன், துணைச்செயலாளராக மாது ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# மாமேதை லெனின் நினைவு நாள் மலரஞ்சலி

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் மாமேதை லெனின் நினைவு நாள் சிபிஐ சார்பில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வி.ரவி தலைமை வகித்தார். தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், நகர செயலாளர் விஜயன், ஒன்றிய செயலாளர்கள் கணேசமூர்த்தி, சுவாமிநாதன், இராமச்சந்திரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# ஆட்டோ தொழிலாளர்களுக்கு ரூ.6000 பென்சன் வழங்குக!

தமிழ்நாடு ஏஐடியூசி தருமபுரி மாவட்ட ஆட்டோ தொழிற்சங்கத்தின் ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைவர் பி.கே.முருகன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் ரவி, கெளரவ தலைவர் மாது முன்னிலை வகித்தனர்.

இச்சங்கத்தின் மாநில செயலாளர் பி.மாரியப்பன் கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். சாலை போக்குவரத்து மசோதாவை ரத்து செய்ய வேண்டும். புதிய மோட்டார் வாகன சட்டத்தால் உயர்த்தப்பட்ட அபராத தொகையை குறைக்க வேண்டும்.

ஆட்டோ தொழிலாளர்களுக்கு ரூ. 6000 பென்சன் வழங்க வேண்டும். பெட்ரோல், டீசல் விலையை கட்டுப்படுத்த வேண்டும். குடிசைமாற்று வாரியம் மூலம் வீடு வழங்க வேண்டும். எப்.சி. காலங்களில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ரூ.10 ஆயிரம் நிதி உதவி வழங்க வேண்டும். கொரோனா கால நிதி உதவி ரூ.7500 யை மூன்று மாதங்களுக்கு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சண்முகம், அறிவழகன், நிர்வாகிகள் நீதி, சோனா, கொடக்காரன், இராமசந்திரன், சதீஸ் மற்றும் மாவட்டக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# ஜீவா வாழ்க்கை வரலாறு நூல் வெளியீடு விருது வழங்கும் விழா




மணப்பாறை விராலிமலை சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் இலக்கிய பேராசான் ஜீவா அறுபதாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஜீவா வாழ்க்கை வரலாறு நூல் வெளியீடு, ஜீவா விருது விழா கலை நிகழ்ச்சியுடன் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட தலைவர் தங்கமணி தலைமை வகித்தார். ஜான் பீட்டர், பசீர், சந்திரமோகன், சேவியர் மதி, சங்கரலிங்கம், ராதாகிருஷ்ணன், நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கவிஞர் ஜீவபாரதிக்கு இஸ்கப் மாநில தலைவர் சௌமா.ராஜரத்தினம் ஜீவா விருதினை வழங்கி உரை நிகழ்த்தினார்.

கவிஞர் த.இந்திரஜித் கவிதையில் எழுதிய ஜீவா வாழ்வியல் வரலாறு நூலை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில செயலாளர் டாக்டர் த.அறம் வெளியிட்டு உரை நிகழ்த்தினார்.

மேலும் இளைஞர்களுக்கான தலைமை பண்பு விருதினைபாரதி கனகராஜுக்கும், நல்லாசிரியர் விருதினை ஆசிரியர்கள் ஜேம்ஸ், ராமசாமி, சேகராஜ், சிறந்த பன்முக கலைஞர் விருதினை தையலர் பாலன், சிற்பக்கலைஞர்விருதினைபங்கிராஜ்க்கும், இளம்சிலம்ப வீராங்கனை விருதினை காதம்பரிக்கும், மனிதநேய பண்பாளர் விருதினை இப்ராஹிமுக்கும், தேசபக்தர் விருதினை சலவை தொழிலாளர் பெரியசாமிக்கும், அகவை முதிர்ந்த பாவலர் விருதினை புலவர் ராஜேந்திர பெருமாளுக்கும், நாட்டுப்புற கலைஞர் விருதினை ராமையாவுக்கும், நாடகக் கலைஞர் விருதினை டி ஆர் ஜெயலட்சுமி கிருஷ்ணப்பா ஆகியோருக்கும் நகர்மன்றத் தலைவர் கீதா மைக்கேல்ராஜ், தி.ஆலை பள்ளி தலைமை ஆசிரியர் அருளரசன், நல்லாசிரியர் அன்புராஜ், இஸ்கப் மாநில பொருளாளர் கோட்டியப்பன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் கலியமூர்த்தி, பேராசியர் மனோன்மணி இஸ்கப் பாலசுப்பிரமணியன் எழுத்தாளர் ஜகஹர் ஆறுமுகம் ஆகியோர் வழங்கி சிறப்பித்தனர்

இஸ்கப் மாநில பொதுச் செயலாளர் ராதாகிருஷ்ணன், அனைத்து இந்திய இளைஞர் பெருமன்ற முன்னாள் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், பக்கிரிசாமி, வழக்கறிஞர் தமிழ்மணி ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள்

தாமரை இதழ் ஆசிரியர் சி. மகேந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார். ஜீவா வாழ்க்கை வரலாறு நூல் எழுதிய இந்திரஜித் ஜீவா விருது பெற்ற ஜீவ பாரதி ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர்.

# பயிர் காப்பீட்டு தொகை வழங்காததை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, தரங்கம்பாடி தாலுகாவில் கடந்த நவம்பர் 11,12 ம் தேதிகளில் பெய்த கனமழையின் காரணமாக விளை நிலங்களும், வீடுகளும் தண்ணீரில் மூழ்கி பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் அதற்காக விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் தொகை செலுத்தி இருந்தும் தற்பொழுது பாதிக்கப்பட்ட சீர்காழி தாலுகாவில் 17 கிராமங்களும், தரங்கம்பாடி தாலுகாவில் 51 கிராமங்களும் பயிர் காப்பீடு தொகை வழங்காமல் புறக்கணித்துள்ளது.

இதனால் ஆத்திரம் அடைந்த விவசாயிகள் சீர்காழி புதிய பேருந்து நிலையம் எதிரே தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பாக பயிர் காப்பீட்டு தொகை வழங்க கோரி கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வி.ச.ஒன்றிய செயலாளர் கே.வரதராஜன் தலைமையில், வி.ச.மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் கே.ராமன், சீர்காழி ஒன்றிய செயலாளர் வே.நீதிசோழன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஏஐடியூசி ஆட்டோ ஓட்டுநர் சங்க தொடக்க விழா

தென்காசி மாவட்டம், அச்சன்புதூரில் ஏஐடியூசி ஆட்டோ ஓட்டுநர் தொழிற்சங்கம் தொடங்கப்பட்டது !

தலைவராக எம்.அப்துல்முத்தி லீப், செயலாளராக எஸ்.முகைதீன் அப்துல்காதர், மற்றும் எஸ்.சுப்பிரமணியன், எஸ்.முகைதீன்மீராசா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

சிபிஐ மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை, ஏஐடியூசி மாவட்ட பொதுச்செயலாளர் டி.சுப்பையா, விதொச மாவட்ட செயலாளர் எம்.எஸ். முத்துசாமி, தென்காசி நகரசெயலாளர் எம்.கணேசன், ஒன்றிய செயலாளர் ஏ.சம்சுதின் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

# பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சீரமைத்திடுக! வி.தொ.ச. வலியுறுத்தல்

தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க சுங்கர அள்ளி கிராம சங்க பேரவைக் கூட்டம் தீ குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், கடத்தூர் ஒன்றிய தலைவர் ஆர்.இராமசந்திரன், ஒன்றிய செயலாளர் எம்.சரவணன், மாவட்ட துணைத்தலைவர் ஜி.ராஜகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சுங்கர அள்ளி ஆதிதிராவிட குடியிருப்பில் வாழும் விவசாய தொழிலாளர் குடும்பங்களின் பழைய தொகுப்பு வீடுகள் பழுதடைந்துள்ளது இதனை பாராமரிப்பு செய்ய வேண்டும். குடிசை வீடுகள், சிமெண்ட் அட்டை வீடுகள், ஓட்டு வீடுகள் அனைத்தையும் பிதான் மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடு கட்ட ஆணை வழங்க வேண்டும். சுங்கர அள்ளி ஆதிதிராவிட குடியிருப்பிற்கு ஒகேனக்கல் குடிநீரை தினமும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை அவலநிலையை கண்டித்து ஆர்ப்பாட்டம்




விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் அரசு மருத்துவமனை உள்ளது. இம் மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் இல்லை. இருக்கும் மருத்துவர்களும் முறையாக சிகிச்சை அளிப்பதில்லை. இங்குள்ள மருத்துவ கருவிகளும் செயல்பாடு இல்லாமல் உள்ளது. போதிய மருந்து மாத்திரைகளும் இல்லை. மாவட்ட நிர்வாகத்திடம் பலமுறை புகார் அளித்தும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அரசு மருத்துவமனை அவலநிலையை கண்டித்தும் , மருத்துவமனை தரம் உயர்தக் கோரியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மருத்துவமனை முன்பு பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பேரூராட்சி தலைவர் தவமணி தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியகுழு உறுப்பினர்கள் கொண்டம்மாள், பொன்மாரி, பேரூராட்சி உறுப்பினர் ராஜேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தேசியகுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வட்ட செயலாளர் கோவிந்தன், பொண்ணுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, தவிச சவுந்திர பாண்டியன் ஆகியோர்கள் பேசினார்கள்.

# மாதர் சங்கத் தலைவர் தனபாக்கியம் மறைவு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் திருவாரூர் மாவட்ட மூத்த தலைவர் தனபாக்கியம், ஜன. 24 அன்று அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தியறிந்து வேதனையுற்றோம்.

முத்துப்பேட்டை ஒன்றிய ஊராட்சியின் பெருந்தலைவராக இருந்த வீரபத்திரனின் வாழ்விணையர் தனபாக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1970 முதல் 1980 வரை பத்தாண்டுகள் மாதர் சங்கத்தின் முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளராக சிறப்பாக பணியாற்றியவர்.

தேர்தல் காலங்களிலும், மக்கள் இயக்கங்களிலும் பெண்களை பெருமளவில் திரட்டி பங்கேற்பது இவரது தனி சிறப்பாக அமையும். கட்சிக்கு நிதி திரட்டி தருவதிலும் முன்னணியில் இருந்தவர்.

பெண்கள் மீதான சமூக ஒடுக்கு முறைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராக தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தவர்.

இவரது கணவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முத்துப்பேட்டை ஒன்றிய செயலாளராக, ஒன்றிய பெருந்தலைவர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர், கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் என பல்வேறு நிலைகளிலும் சிறப்பாக செயல்பட்டவர்.

கணவன், மனைவி இருவரும் பொதுவாழ்வில் ஈடுபட்டு பொது மக்களின் நன்மதிப்பை பெற்றவர். அவரது மறைவு எளிதில் ஈடுசெய்ய இயலாத இழப்பாகும்.

இவர்களுக்கு சிவராமன், கந்தசாமி, இரணியன், பாண்டியன் ஆகிய நான்கு மகன்களும், இரண்டு மகள்களும் இருக்கின்றனர்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# பாரேரி கிராமத்தில் பொங்கல் விழா




செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோயில் ஊராட்சி பாரேரி கிராமத்தில் இளைஞர் பெருமன்றம் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் இந்திய மாதர் தேசிய சமேளனம் இணைந்து நடத்திய பொங்கல் விளையாட்டு விழா இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் வெற்றி பெற்ற சுமார் 150 க்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கிராமிய கலைகளை மீட்டெடுக்கும் விதமாக கலைத் திருவிழாவும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தாமரை இலக்கிய இதழ் ஆசிரியர் சி.மகேந்திரன், மாநில நிர்வாக குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், மாநில குழு உறுப்பினர் டாக்டர் இர.சாந்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன், கிராமிய கலை பாடகி தஞ்சை சின்ன பொண்ணு, கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட செயலாளர் சி.ராமலிங்கம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தொகுதி தலைவர் விஜயன் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

# போக்குவரத்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

ஓய்வூதியம் பெற்ற தொழிலாளர்களுக்கு டி.ஏ. உயர்வு வழங்கிடு, மருத்துவ காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்து, நிலுவையில் உள்ள ஓய்வு கால பண பலன்களை வழங்கிடு என்பன உள்ளிட்டை கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியூசி தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திருவண்ணாமலை மண்டல அலுவலகம் முன்பு த.ராஜேந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கோ.தங்கவேலு, எம்.எஸ் மாதேஸ்வரன், வி.குப்புரங்கன் மற்றும் ப.தி. ராசேந்திரன், வி.விஸ்வநாதன், டி.வெங்கடேசன் சேகர் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். ஏ.மூர்த்தி நன்றி கூறினார்.

# திருத்தம்

சென்ற வார ஜனசக்தி இதழில் (ஜன 22–28) வெளியான என் தந்தையைக் காட்டிய ஜீவா கட்டுரையில் “1963ஆம் ஆண்டு” என தவறுதலாக வந்து விட்டது. அதை 1961ஆம் ஆண்டு என திருத்தி வாசிக்கவும்.

இவண்
ஆசிரியர் குழு, ஜனசக்தி

# ஜனசக்திக்கு 18 ஆண்டு சந்தா



சென்னை பாலன் இல்லத்தில், தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்க பிரிதிநிதிகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனை சந்தித்து பேசினர். அப்போது 18 ஜனசக்தி ஆண்டு சந்தாவுக்கான பணம் வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடல் வளத்தை சூறையாடும்

# மடிவலை பயன்படுத்துவதை கண்டித்து ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர் மாவட்ட நாட்டு படகு ஏஐடியூசி மீனவர் சங்கம் சார்பில், மடிவலை வைத்து கடலையும், கடல் வளங்களையும், சாதாரண மீனவர்களையும் நாசப்படுத்துகின்ற விசைப்படகுகள் மீது நடவடிக்கை எடுக்காத தமிழ்நாடு மீன்வளத்துறையை கண்டித்து அதிராம்பட்டினம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாட்டுப் படகு மீனவர் சங்க மாவட்ட செயலாளர் என்.காளிதாஸ் தலைமை வகித்தார். தமிழ்நாடு ஏஐடியூசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் பி.சின்னதம்பி ஆர்ப்பாட்டத்தை. துவக்கி வைத்து உரையாற்றினார். தேசிய மீனவர் பேரவை தலைவர் டாக்டர் ஆர்.வி. குமரவேலு, ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரை யாற்றினார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான மீனவர்கள் பங்கேற்றனர்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளை துவக்கம்

பர்கூர் வட்டம் மல்லப்பாடி பஞ்சாயத்து அண்ணா நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வட்டகுழு உறுப்பினர் ராஜேந்திரன் தலைமையில் புதிய கிளை துவங்கப்பட்டது. கூட்டத்தில் மத்திய மாநில அரசியல் நிலை குறித்து மாநில குழு உறுப்பினர் எஸ்.கண்ணு பேசினார் மாவட்ட குழு உறுப்பினர் வி.மோகன் கட்சியின் கொள்கைகள் அமைப்பு நிலை குறித்து பேசினார் கூட்டத்தில் கிளை செயலாளராக கோவிந்தராஜ், துணை செயலாளராக ராகவன், பொருளாளராக வெண்ணிலா ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். பூங்கொடி நன்றி கூறினார்.

# விருதுநகர் பி.எம்.இராமசாமி நினைவஞ்சலி கூட்டம்

இராஜபாளையம் பிஎம்ஆர் முத்து மகாலில், ஏஐடியுசி முன்னாள் மாவட்ட தலைவர் பி.எம்.இராமசாமி அவர்கள் 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட அமைப்புச் செயலாளர் வி.இரவி தலைமை வகித்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, இராஜபாளையம் மில் தொழிலாளர் சங்க செயலாளர் விஜயன் உள்ளிட்டோர் அவரது படத்திற்கு மலரஞ்சலி செய்து வீர வணக்கம் செய்தார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

### 105. ஓதல்

**ஓதியோதி உண்மையுணர்ந்தால் ஒருவனை**
**ஏந்தியேந்தி ஏத்து மிகம்.**


பல்வேறு துறைகளையும், (பல்வேறு கோணங்களிலும்) கற்றுத் தேர்ந்த அறிவாளியை இவ்வுலக மக்கள் தாங்கிப்பிடித்து உயர்த்துவார்கள். (ஓதிஓதி, ஏந்திஏந்தி – அடுக்குத் தொடர்கள்)

**ஒத்தொத் தொருவன்நன் கோதுதல் ஒத்ததே**
**ஒத்ததூன்றல் ஒப்பிலா ஒன்று**

தான் ஏற்றுக் கொண்ட கொள்கைகளைத் தரும் நூல்களை நன்கு கற்றல் சிறப்பு. அதனின் சிறப்பு கற்றவற்றை நடைமுறைப்படுத்துதலாகும். ( பொற்பொருள் பின்வரு நிலையணி)

# நூல் நயம்

## தோழர் ப. மாணிக்கத்தின் தியாக வாழ்வு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான தலைவர்களில் ஒருவரும், பொது வாழ்வில் ஒரு மாணிக்கம் என தினமணி நாளிதழ் தலையங்கத்தில் பாராட்டப்பட்டவருமான தோழர் ப. மாணிக்கம் அவர்கள். தன்னலம் கருதாது தமிழ்ச் சமூகத்திற்காகவே வாழ்ந்து மறைந்திட்ட, சமரசமற்ற மார்க்சிய போராளி மாணிக்கத்தின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாகவும். அவரது எழுத்துக்களையும், அப்பழுக்கற்ற அவரது வாழ்க்கை செயல்பாடுகளையும் நினைவு கூறும் விதமாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தால் "தோழர் ப. மாணிக்கத்தின் தியாக வாழ்வு " என்னும் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

நமது ஜனசக்தி பத்திரிகை கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் கட்சியில் சேர்ந்த அனுபவங்களையும், சில நினைவுகளையும், சொந்த அனுபவங்களையும் எழுதி இருக்கிறார். "உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த 1941 ஆம் ஆண்டில் கட்சியில் சேர்ந்த அவர். 1942 இல் மாணவர் அமைப்பில் தீவிரமாக பங்கு பெற்றிருக்கிறார். நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை தொழிலாளி ஒருவரால்,இவர் கட்சியில் சேர்வதற்கு முன்னால் சில பிரசுரங்களை கொடுத்து படிக்க பயற்றுவிக்கப்பட்டுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து "நமது நாடு எப்படி விடுதலை அடைவது? காந்திய சத்தியாகிரக வழியா? வெகுஜன போராட்ட வழியாகிய கம்யூனிஸ்ட் வழியா என்பது விவாதிக்கப்பட்டது. என்னை கவர்ந்த வழி வெகுஜன போராட்ட வழியாகிய கம்யூனிஸ்ட் வழியாகும். இந்த சமயத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் மனதில் பிரதான இடத்தில் இருந்தது . அதற்கு இந்த அரசியல் காரணம் மட்டும் தானா? இல்லை பிற காரணங்களும் உள்ளன" மக்களின் அபிலாசை எதுவோ அதை பற்றி நின்றதால் கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடத்தில் ஆழமாக வேரூன்றி இருந்த காரணத்தை அலசுகிறார்.

தோழர் ஜீவானந்தத்தைப் பற்றி குறிப்பிடும் போது "1937 இல் கோவை மில் தொழிலாளர் சங்கத்தை நிறுவினார். பிற்பாடு நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 30,000 மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கெடுத்து கொண்டனர் . ஜீவாவின் முன்முயற்சியாலே தென் பிராந்திய ரயில்வே ஊழியர் சங்கம் 1937 செயல்பட தொடங்கியது. மதுரை பஞ்சாலை தோழர்களுக்கும் அவர் வழிகாட்டினார். சிறந்த போராட்டங்களை நடத்தினார் . இதுபோன்றே கள்ளிறக்கும் தொழிலாளர்கள், மோட்டார் தொழிலாளர்கள், அச்சு தொழிலாளர்கள் அனைவரையும் தொழிற்சங்கத்தில் ஒருங்கமைத்து பல உறுதிமிக்க போராட்டங்களை ஜீவா நடத்தினார் " என குறிப்பிடுகிறார்.

இந்நூலை நாம் படிப்பதன் மூலமாக தோழர் ப. மாணிக்கத்தின் வாழ்க்கை வரலாற்றை மட்டுமல்ல, அன்றைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றையும் அறிந்து கொள்ள முடியும். எனவே அனைவரும் இந்நூலை வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| பக்கம் | : 104 | விலை : 80 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 | |

## மண்ணும் மனிதனும்




எழுத்தாளர் பூமி பாலகன் எழுதிய மண்ணும் மனிதனும் என்னும் சமூக புதினம் இது. நமது நாட்டினுடைய விவசாய நிலங்களை பாதுகாக்க போராடிக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் விவசாய தலைவர்களுக்கும் இந்நூலை அவர் சமர்ப்பணம் செய்துள்ளார். விவசாயின் கொந்தளிப்பு மிகுந்த இந்த காலத்தில் இது அவர்களுக்கு ஒரு பக்கபலமாக இருக்கும்.

ஒரு காலத்தில் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்த சேலம் மாவட்டம் தற்போது தர்மபுரி, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி என பல்வேறு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு இருக்கிறது.கால மாற்றத்திற்கு இணையாக இம்மாவட்டங்களில் பண்பாட்டுக் கூறுகளும், மக்களும் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். இப்புதினத்தில் நடமாடிக் கொண்டிருப்பவர்களும் அப்படித்தான் மாறிட முயற்சிக்கிறார்கள். "நமது ஆரம்பகாலம் பெண் கடவுள்தான். பெண்கள் தான் முன்னின்று எல்லாத்தையும் செஞ்சிருக்காங்க. பெண்கள் தான் நிர்வாகத்தை பண்ணியிருக்காங்க. நமக்கு வழிகாட்டி பாதுகாப்பாக இருந்த வீரம், திறமை மிக்க பெண்களை கும்பிட்ட சமுதாயம்தான் நாம். பிற்பாடு அவங்கள கடவுளா மாற்றிவிட்டார்கள்" என்னும் வரிகள். முத்திரை வரிகள்.

இந்நாவலில் எட்டு வழி சாலையை பேசும் முன், பட்டா பெயர் மாற்ற பிரச்சனை, சாலை பணியாளர் பிரச்சினை ஆகியவை பற்றியும் பேசி உள்ளார். மூன்றிலுமே போராடி வெற்றி பெற்ற முதன்மை பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார் ஆசிரியரான பாலசந்திரன். அவருக்கு ஆதரவாக தமிழரசு என்னும் வழக்கறிஞர் பாத்திரம்.

எந்த கட்சியாக இருந்தாலும் மக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால், ஒரு பாதிப்பு என்றால் போராட வேண்டும் என்பது நாவலாசிரியர் எண்ணமாக, லட்சியமாக உள்ளதை நாவல் உணர்த்துகிறது.

இவர் இதுவரை ஆறு சிறுகதை தொகுப்புகளும், ஆறு கவிதை தொகுப்புகளும், மூன்று கட்டுரை தொகுதிகளும், ஒரு பயண நூலும், மூன்று நாவல்களும் எழுதி உள்ளார். பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். சமூக மாற்றத்திற்கான எழுத்தாளர் இவர். இவர் எழுதிய மண்ணும் மனிதனும் என்னும் இந்த நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : பூமிபாலகன் | |
| பக்கம் | : 192 | விலை: 150 |
| வெளியீடு | : மலர்விழி பதிப்பகம், 16, புதிய கந்தப்ப குடியிருப்பு, அன்னதானப்பட்டி, சேலம் 2 | |



16 ம் பக்கத் தொடர்ச்சி

செய்யப்பட்டனர். பழங்குடிப் பகுதிகளில் உடனடியாக பள்ளிகளை துவங்க வேண்டும், சத்தியமங்கலம் அரசு கல்லூரியில் முதுகலைப் பாடப்பிரிவுகளை தொடங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்ட மாநாடு 22.01.2023 அன்று தோழர் கே.டி.கே இல்லத்தில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.இப்ராஹிம் கொடியேற்றி, மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.

கட்சியின் ஒட்டன்சத்திரம் ஒன்றிய செயலாளர் சக்திவேல், வழக்கறிஞர் சதாம்உசேன், டாக்டர் பி.எல். வெள்ளைச்சாமி, இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.வினோத்குமார், மாவட்டத் தலைவர் பத்மநாபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் புதிய மாவட்ட குழு உறுப்பினர்களாக 13 பேர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத் தலைவராக வசந்தராஜ், செயலாளராக சஞ்சீவ், பொருளாளராக அருண், துணைச் செயலாளராக ராஜ்குமார், துணைத் தலைவராக சூர்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் திண்டுக்கல் மாவட்ட செயலாளர் தோழர் ஏ.பி.மணிகண்டன் கலந்துகொண்டு நிறைவுறையாற்றினார்.

**வேலூர்:** வேலூர் மாவட்டப் பேரவை கூட்டம் 22.01.2023ஆம் தேதி குடியாத்தத்தில் நடைபெற்றது. இந்த பேரவைக் கூட்டத்திற்கு மாணவர் பெருமன்றத்தின் மாநில துணைத்தலைவர் பிரகாஷ் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் ஜி.லதா, ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் மணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில், மாவட்டச் செயலாளராக கார்த்திக், மாவட்டத் தலைவராக லோகேஷ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**ஈரோடு தெற்கு:** மாணவர் பெருமன்றத்தின் ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்புக் குழுக் கூட்டம் வங்கி ஊழியர் சங்க அலுவலகத்தில் 22.01.2023ஆம் தேதி அமல் உன்னிகிருஷ்ணன், நந்திதா, கபிலன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாணவர் பெருமன்ற மாநில துணைத்தலைவர் பா.தினேஷ் கூட்டத்தை தொடக்கி வைத்து பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.டி.பிரபாகரன், மாவட்டப் பொருளாளர் என்.ரமணி, ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம், மாவட்ட அமைப்பாளர் டி.பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாணவர் பெருமன்ற முன்னாள் மாநிலத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் நிறைவுறை நிகழ்த்தினார். இதில் 11 பேர் கொண்ட மாவட்ட அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது. மாவட்ட அமைப்பாளராக அமல் உன்னிகிருஷ்ணன், மாவட்ட துணை அமைப்பாளர்களாக கபிலன், பி.மஞ்சு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**திருப்பூர் மாநகர்:** மாணவர் பெருமன்றத்தின் திருப்பூர் மாநகர் மாவட்டப் பேரவை கூட்டம் 22.01.2023 அன்று காலை 10 மணிக்கு பி.கே.ஆர் இல்லத்தில் நடைபெற்றது.

இப்பேரவைக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்டப் பொருளாளர் எஸ்.செல்வராஜ், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் காட்டே ராமசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். மாணவர் பெருமன்ற மாநிலக் குழு உறுப்பினர் ஜி.சங்கீதா, வனிதா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடி மாவட்டப் பேரவைக் கூட்டம் 22.01.2023 அன்று கோவில்பட்டி ஜீவா இல்லத்தில் நடைபெற்றது. நெல்லை இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் முத்துகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார்.

கட்சியின் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் கருப்பன், துணை செயலாளர் பாபு, நகர செயலாளர் சரோஜா ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இக்கூட்டத்தில் 13 பேர் கொண்ட மாவட்ட குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக ராஜா, மாவட்டச் செயலாளராக பாலாஜி, மாவட்டப் பொருளாளராக அபிசேகம் சிங் , மாவட்ட துணைச் செயலாளராக சிவா, மாவட்ட துணைத் தலைவராக ரஞ்சனி கண்ணம்மா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்ட மாநாடு 22.01.2023ஆம் தேதி திருச்செங்கோட்டில் மாவட்டச் செயலாளர் து.இளையராஜா தலைமையில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் த. மோகன் வரவேற்றுப் பேசினார். கட்சியின் நாமக்கல் மாவட்டச் செயலாளர் க.அன்புமணி மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார். மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் வெ.நிருபன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் எஸ்.மணிவேல், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இளைஞர் பெருமன்ற நகரத் தலைவர் பி.கார்த்தி நன்றி கூறினார். மாவட்ட செயலாளராக மணிகண்டன், மாவட்டத் தலைவராக இளையராஜா, பொருளாளராக ரித்திக், துணைச் செயலாளராக புவனேஷ், துணைத் தலைவராக சூர்யா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கடலூர்:** கடலூர் மாவட்டத்தின் மாவட்டப் பேரவை கூட்டம் 22.01.2023 அன்று பண்ருட்டியில் அமிர்த செல்வி தலைமையில் நடைபெற்றது. தமிழ் வரவேற்றுப் பேசினார். கட்சியின் மாவட்டச் செயலாளர் துரை, மாவட்டப் பொருளாளர் எம்.கே. பழனிசாமி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பன்னீர் செல்வம், மாவட்டத் தலைவர் குஃலோப் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ச.பூர்ணிமா நந்தினி கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். காயத்திரி பிரியா நன்றி கூறினார்.

இப்பேரவையில் 13 பேர் கொண்ட மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்பாளராக தமிழ் தேர்வு செய்யப்பட்டார்.

ஒன்றிய மற்றும் கிளை பேரவைக் கூட்டங்கள் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் சத்தியமங்கலம், அந்தியூர், பவானிசாகர் வடக்கு, பவானிசாகர் தெற்கு, பவானி ஒன்றியம், பவானி நகரம் ஆகியவற்றில் ஒன்றிய பேரவைக் கூட்டங்களும், சென்னை நந்தனம் கல்லூரி கிளைப் பேரவைக் கூட்டமும் நடைபெற்றுள்ளது.

# மாணவர் பெருமன்றம் போராட்டம் அறிவிப்பு புதிய பள்ளி கட்டிடம் திறப்பு

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், புதுக்குப்பம் கிராமத்தில் பழுதடைந்த பழைய கட்டிடம் இடிக்கப்பட்டு, அதற்கு பதிலாக புதியதாக பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு 19.12.2022 அன்று திறக்கப்பட்டது. ஆனால், அந்த பள்ளியில் வகுப்பு நடத்தாமல், பழுதடைந்த கூட்டுறவு கட்டிடத்தில் வகுப்பு நடத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னர் வகுப்பு நடைபெற்ற கட்டிடத்தில் மின்கசிவு ஏற்பட்டு மாணவர் பாதிக்கப்பட்டார். இந்நிலையில் உடனடியாக புதிய பள்ளி கட்டிடத்தை திறந்து வகுப்பு நடத்த வேண்டும் என்று அனைத்திந்திய மாணவர் பெருமன்ற திருவள்ளூர் மாவட்டக்குழு சார்பில் போராட்ட அறிவிப்பு துண்டு பிரசுரம் மூலம் அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் அளிக்கப்பட்டது. இந்நிலையில் அதிகாரிகள் தலையிட்டு பள்ளியை திறந்து வகுப்பை தொடங்கினர்.

**தலித் மக்கள், பழங்குடி மக்கள் மீதான தொடர் ஒடுக்குமுறைகளைக் கண்டித்து தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் மண்டலப் பேரவைக் கூட்டங்கள் நடைபெற்றன.**

# தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மண்டலக் கூட்டங்கள்




**சென்னை:** வட சென்னை, மத்திய சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், தென்சென்னை ஆகிய மாவட்டங்கள் இணைந்து பாலன் இல்லத்தில் மாநிலத் தலைவர் இரா. நல்லகண்ணு தலைமையில் விரிவடைந்த பேரவை கூட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இன்றைய தேசிய, மாநில அரசியல் நிலை குறித்து விரிவாக பேசினார். தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் எஸ்.கே.சிவா தேசியக் குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். தேசிய குழு உறுப்பினர் லி.உதயகுமார், மண்டல, மாவட்டக்குழு கூட்டங்கள் குறித்து பேசினார். வடசென்னை மாவட்ட செயலாளர் சுப்பிரமணி நன்றி கூறினார். கூட்டத்தில் மாநிலக் குழு உறுப்பினர் டி.செண்பகம், வடசென்னை மாவட்ட தலைவர் இரா.மோ.சந்தோஷ் குமார், பொருளாளர் சு.பாஸ்கர், காஞ்சிபுரம் ஜி.ராமச்சந்திரன், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், தலைவர் கர்ணா, தென் சென்னை மாவட்ட செயலாளர் பேராசிரியர் சம்பத்குமார், தலைவர் வழக்கறிஞர் அசோகன், திருவள்ளூர் மாவட்ட பொறுப்பாளர்கள் ராஜீவ் காந்தி, கிருஷ்ணன், மத்திய சென்னை பொறுப்பாளர் நாகலிங்கம் உட்பட முன்னணி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம்:** கள்ளக்குறிச்சி, திருச்சி புறநகர், மாநகர், கடலூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் இணைந்து விழுப்புரம் எம்.கே திருமண மண்டபத்தில் தேசியக் குழு உறுப்பினர் லி.உதயகுமார் தலைமையில் பேரவை கூட்டம் நடைபெற்றது. தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசிய தலைவர் புதுவை அ.ராமமூர்த்தி கலந்து கொண்டு தேசிய அரசியல் மற்றும் தேசியக்குழு முடிவுகளை விவரித்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விழுப்புரம் மாவட்ட செயலாளர் அ.சௌரிராஜன், மாதர் சம்மேளனத் தலைவர் வளர்மதி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

**கோவை:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மேற்கு மண்டல பேரவை கூட்டம் கோவை ஜீவா இல்லத்தில் நடைபெற்றது. இதில் சாதி ஆணவ படுகொலைக்கு எதிராக தனி சட்டம் இயற்ற வேண்டும் என்று தீர்மானம் இயற்றப்பட்டது. ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் கொடியை மூத்த தோழர் சி. சுப்பையன் ஏற்றி வைத்தார். பேரவை கூட்டத்திற்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மேற்கு மண்டல பொறுப்பாளர் ஏ. அஷ்ரப்அலி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் பி. முருகன் துவக்கி வைத்தார். நாமக்கல் மாவட்ட செயலாளர் எஸ். ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா. பெரியசாமி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொருளாளர் வழக்கறிஞர் கே சுப்பிரமணியம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட துணை செயலாளர் ஜே.ஜேம்ஸ், அனைத்திந்திய மாணவர் மன்றத்தின் மாநில தலைவர் எம். குணசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**மதுரை:** மதுரை டியூக் ஹோட்டலி ல் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் தலித் மற்றும் சிறுபான்மை மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தென்மண்டல கருத்தரங்கம் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் மூர்த்தி தலைமையில், மாநகர் மாவட்டச் செயலாளரும் வழக்கறிஞருமான சாமி, இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் செந்தில் வேலன் முன்னிலையில் நடைபெற்றது. தேசியக் குழு உறுப்பினர் கிருஷ்ணன் துவக்க உரையாற்றினார். சிபிஐ மாநகர் மாவட்டச் செயலாளர் எம்.எஸ். முருகன் வாழ்த்துரை வழங்கினார். சிபிஐ மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ் நிறைவுரையாற்றினார். புறநகர் மாவட்ட பொருளாளர் பூமிநாதன் நன்றியுரை கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழர்களின் வீர விளையாட்டான மஞ்சு விரட்டு தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக மதுரை அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் மற்றும் பிற பகுதிகளில் நடைபெறும் போது, மஞ்சுவிரட்டில் பங்குபெறும் காளைகளை அவிழ்க்கும் போது உரிமையாளர்கள் பெயர்களை ஜாதியாக சொல்லி அறிவிப்பு செய்வதை மாவட்ட ஆட்சியர் தடுத்து நிறுத்த கோரியும், ஜல்லிக்கட்டு காளைகள் போட்டிக்கு செல்லும் போது பறைகள் அடித்து துவங்கும் ஆதிகால முறையை மீண்டும் பின்பற்றவும் வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வேதாரண்யம்:** நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மண்டல சிறப்புப் பேரவை கூட்டம் நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு தலைமையில் நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் கே.மாரிமுத்து, அமைப்பின் மண்டல பொறுப்பாளர் வி.கல்யாணசுந்தரம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வை.செல்வராஜ்(திருவாரூர்), சிவகுரு. பாண்டியன்(நாகப்பட்டினம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.வீரபாண்டியன் பேசும்போது தெரிவித்ததாவது: ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதுக்குள்ளும் எண்ணங்களாக பயணிக்கும் ஜாதி அகற்றப்பட வேண்டும். அதுவரையில் தீண்டாமைக்கு எதிரான போராட்டம் தேவையாக உள்ளது.

ஒடுக்கப்பட்ட மக்கள் ஆலய வழிபாடுகளில் சமத்துவம், மண்டகப்படி உரிமை போன்றவைகளுக்கு தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. பெண்கள் உள்ளிட்ட ஒடுக்கப்பட்டோர் நலனுக்கு அல்லது உரிமைக்கு எதிரான நிகழ்வுகள் தொடர்ந்து வருகிறது. அதனை எதிர்கொள்ளும் இயக்கமாக தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் செயல்படும் என்றார் அவர்.

## மண்டலக் கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் தலித் மக்களுக்கு என்று தனியாக அமைத்துக் கொடுத்த தண்ணீர் தொட்டியில் சாதி ஆதிக்க வெறியர்களால் மனித மனத்தைக் கொட்டி தலித் மக்கள் அந்த குடிநீரை குடித்ததனால் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டதற்கு காரணமான சாதி ஆதிக்க வெறியர்களை உடனடியாக கைது செய்து, உண்மையை தமிழக மக்களுக்கு வெளிக்கொணர வேண்டும். அதுமட்டுமல்லாமல் இனிவரும் காலங்களில் கிராமப்புறங்களில் தலித் மக்களுக்கு என்று தனியாக குடிநீர் தொட்டி அமைத்துக் கொடுக்காமல், அனைத்து சாதி மக்களும் ஒன்றாக குடிநீர் குடிப்பதற்கு தொட்டி அமைத்து கொடுத்து சாதி வன்மத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தொடர்ந்து தலித், பழங்குடி மக்கள் மீதான தாக்குதல்களை அரசு உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

கிராமப்புறங்களில் நாடு விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் கடந்த பிறகும் இரட்டை டம்ளர் முறை நீடிப்பது மனித குலத்திற்கு இழுக்கானது. இதனை வன்மையாக கண்டிப்பதோடு அல்லாமல், உடனடியாக இம் முறையை தமிழகத்தின் கிராமங்களில் இருந்து அப்புறப்படுத்துவதற்கான அந்தந்த மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் கண்காணிப்பு குழு அமைத்திட வேண்டும்.

தலித் மக்களுக்காகத்தான் தாட்கோ உருவாக்கப்பட்டது. அந்த தாட்கோவில் தலித் மக்கள் மேம்பாட்டிற்காக கடன் உதவி கேட்டு விண்ணப்பித்தால் பல்வேறு சான்றிதழ்களை கேட்டு தாட்கோ கடன் உதவி வழங்குவதில் தடை ஏற்படுத்தி, இந்த நிதியை வசதி படைத்தவர்களுக்கு வழங்கும் அதிகாரிகளை இப்பேரவை கூட்டம் வன்மையாக கண்டித்து, இந்த நிதி தலித் மக்களுக்கு முறையாக கிடைப்பதற்கு தமிழக அரசு தலையிட்டு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக குறிப்பாக மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களில் பட்டியலினத்தை சார்ந்த இளைஞர்கள் மாற்று சாதி பெண்களை காதல் செய்தார்கள் என்பதற்காகவே ஆணவப்படுகொலை செய்யப்பட்டு உள்ளார்கள்.

தர்மபுரி இளவரசன், உடுமலை சங்கர், நாமக்கல் கோகுல்ராஜ் உள்ளிட்ட இளைஞர்கள் சாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மேல்முறையீடுகளுக்கு செல்லும் போது சில வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டுவிடுகிறார்கள்.

ஆணவப் படுகொலைகளில் குற்றம் சாட்டப் படுபவர்கள் சட்டத்தில் இருக்கக்கூடிய சில ஓட்டைகளை பயன்படுத்தி தப்பி விடுகின்ற காரணத்தால், தனிச் சட்டத்தை மத்திய, மாநில அரசுகள் இயற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

உச்சநீதிமன்றம் அறிவுறுத்திய பின்பும் இதுவரை மத்திய மாநில அரசுகளால் ஆணவபடுகொலைக்கு என்று தனிச்சட்டம் இயற்றப்படவில்லை.

ஆகவே, ஆணவப்படுகொலைக்கென்று தனி சட்டம் உடனடியாக இயற்ற வேண்டும்.

புணதிரை வண்ணார், பழங்குடி இருளர், மலைக்குறவர், காட்டு நாயக்கர், நரிக்குறவர், இந்து ஆதியன் உள்ளிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் சாதி சான்று கேட்டு விண்ணப்பித்து பல வருடங்கள் ஆகியும் சாதி சான்று வழங்காமல் அல்லல்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு உரிய விசாரணை மேற்கொண்டு சாதிச் சான்று வழங்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் மூங்கில்துறைப்பட்டு பகுதியில் இரு சமூகத்தினருக்கு ஏற்பட்ட மோதலில் காவல்துறை அதிகாரிகளும் உளவுத் துறை அதிகாரிகளும் காவல்துறை தனிப்பிரிவு அதிகாரிகளும் முறையாக நடவடிக்கை எடுக்காமல் மெத்தன போக்கை கையாண்டதால் அம்பேத்கர் நகரில் 30க்கும் மேற்பட்ட வீடுகள் அடித்து சூறையாடப்பட்டிருக்கிறது.

இந்த போக்கை வன்மையாக கண்டிப்பதோடு காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மண்டலக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan ., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 28.01.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாவட்ட மாநாடுகள்



**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட மாநாடுகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதில் மாணவர்கள் பெருந்திரளாக எழுச்சியோடு பங்கேற்றனர்.**

**தேனி:** மாணவர் பெருமன்றத்தின் தேனி மாவட்ட 3வது மாநாடு 21.01.2023 அன்று சின்னமனூர் ஆதித்யா டவரில் தோழர் மு.செல்லமுத்து நினைவு அரங்கில் மாவட்ட தலைவர் கே.சிவலட்சுமி தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை கே.பாண்டீஸ்வரி ஏற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் கே.பெருமாள் துவக்கவுரை நிகழ்த்தினார். மாவட்டத் துணைச் செயலாளர் மு.ஹரிஹரன் அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார். மாவட்ட செயலாளர் செ.ஆனந்த் வேலை அறிக்கை, வரவு செலவு வாசித்தார். மாநில பொருளாளர் சு.பாலசுப்ரமணியம் மாவட்ட நிர்வாகிகளை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டில், 13 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. மாவட்டத்தலைவராக உத்தம்சிங், மாவட்டச் செயலாளராக செ.ஆனந்த், மாவட்டப் பொருளாளராக தோழர் கே.சிவலட்சுமி, மாவட்ட துணைத் தலைவர்களாக தோழர்கள் க.சஞ்சய், மு.பாலாஜி, மாவட்ட துணைச் செயலாளர்களாக தோழர்கள் மு.ஹரிகரன், கே.பாண்டீஸ்வரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் வே.பரமேஸ்வரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எம்.எஸ்.பி.ராஜ் குமார், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் இ.பி.காசிவிஸ்வநாதன், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் இரா.தமிழ் பெருமாள், இஸ்கப் மாவட்ட செயலாளர் வி.முல்லை முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**தஞ்சாவூர் தெற்கு:** தஞ்சாவூர் தெற்கு மாவட்ட 16வது மாநாடு 21.01.2023 அன்று தஞ்சை பெசண்ட் அரங்கத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் மருத்துவர் ச.சுதந்திர பாரதி மாநாட்டிற்கு தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் ஆர்.ஆர்.முகில் மாநாட்டினை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் ஜெ.ல.ஜீவா வேலை அறிக்கை வாசித்தார். ‘சமுதாய கடமைகளில் மாணவர்களின் பங்கு’ என்ற தலைப்பில் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, ‘மாணவர் பெருமன்றத்தின் வரலாறு மற்றும் எதிர்கால கடமைகள்’ என்ற தலைப்பில் பேராசிரியர் கோ. பாஸ்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ் குமார், இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் க.காரல் மார்க்ஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பூமிநாதன் நன்றி கூறினார்.

மாவட்டத் தலைவராக டி.செல்வி, செயலாளராக எஸ்.பூமிநாதன், பொருளாளராக இ.ஹரீஷ், துணைத் தலைவராக ஆர்.முத்துகுமார், துணைச் செயலாளராக சாருக் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநாட்டில் தேசிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திரும்ப பெற வேண்டும், அனைத்து கல்வி வளாகங்களிலும் மாணவர்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், டெல்டா மாவட்டங்களை மையமாகக் கொண்டு தஞ்சாவூரில் அரசு சட்டக் கல்லூரியை துவக்க வேண்டும், விவசாயம் சார்ந்த டெல்டா மாவட்டங்களுக்கு அரசு வேளாண் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்ட சிறப்பு பேரவைக் கூட்டம் 21.01.2023 அன்று சீர்காழி அண்ணங்கார் நினைவகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பகத்சிங் தலைமையில் நடைபெற்றது

கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் மா.பிரபாகரன், கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் எல்.சுரேஷ், கபிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் மௌ.குணசேகர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

சீர்காழியில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி உருவாக்கிட வேண்டும், மாவட்டத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி உருவாக்கிட வேண்டும், மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளின் கட்டமைப்பை வசதிகளை மேம்படுத்திட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்டச் செயலாளராக க.பகத்சிங், தலைவராக இதயகுமரன், துணைச் செயலாளராக பிரவீன் ராஜ், துணைத் தலைவராக அபினேஷ், பொருளாளராக மணிமாறன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்ட முதல் மாநாடு 21.01.2023 அன்று சிவகிரியில் ஜி.கனகராஜ் தலைமையில் நடைபெற்றது.

மாணவர் பெருமன்ற மாநிலப் பொருளாளர் சு.பாலசுப்ரமணியன் அமைப்பின் கொடியினை ஏற்றிவைத்து மாநாட்டினை தொடங்கி வைத்து உரையாற்றினார். இளைஞர் பெருமன்ற நகர செயலாளர் க.பால்சாமி வரவேற்புரையாற்றினார்.

கட்சியின் நகர செயலாளர் பி.பாலசுப்ரமணியன், இளைஞர் பெருமன்ற மாவட்டக் குழு உறுப்பினர் எல்.வேல்முருகன், மாதர் சங்க மாவட்ட துணை தலைவர் ஜி.சண்முகவடிவு ஆகியோர் வாழ்த்தி பேசினார். கட்சியின் தென்காசி மாவட்ட செயலாளர் டி.இசக்கிதுரை புதிய மாவட்ட நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி நிறைவுரையாற்றினார்.

இம்மாநாட்டில், 13, பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக எம்.கணேசன், துணை தலைவராக என்.ரமேஷ், மாவட்டச் செயலாளராக எம்.கனகராஜ், துணைச் செயலாளராக ஜி.லட்சுமிப்ரியா, பொருளாளராக எஸ்.முகேஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்ட மாநாடு இராஜபாளையம் பி.எம்.ஆர். மகாலில் 21.01.2023ஆம் தேதி நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தி.ராமசாமி, மாவட்டச் செயலாளராக பி.லிங்கம் சிறப்புரையாற்றினர்.

இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் செந்தில் குமார், கணேசமூர்த்தி, பகத்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் மாவட்டத் தலைவராக ராமமூர்த்தி, செயலாளராக ஸ்ரீராம், பொருளாளராக திருவேங்கடம் தேர்வு செய்யப்பட்டனர். 20 பேர் கொண்ட மாவட்டக் குழுவும் தேர்வு செய்யப்பட்டது.

**பெரம்பலூர்:** பெரம்பலூர் மாவட்ட மாநாடு 21.01.2023 அன்று மாவட்ட அலுவலகத்தில் ஜீவா தலைமையில் நடைபெற்றது. இதில் மாணவர் பெருமன்ற மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் க.இப்ராகிம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கட்சி மாவட்டச் செயலாளர் ஜெயராமன் வாழ்த்துரை நிகழ்த்தினார். புதிய மாவட்டச் செயலாளராக அபிஷேக் தேர்வு செய்யப்பட்டார்.

**ஈரோடு வடக்கு:** ஈரோடு வடக்கு மாவட்ட மாநாடு 22.01.2023 அன்று சத்தியமங்கலம் ஜீவா அரங்கத்தில் நடைபெற்றது.

மாநாட்டுக் கொடியினை ஏற்றியும், மாநாட்டினை தொடங்கி வைத்தும் மாநிலத் தலைவர் மௌ.குணசேகர் பேசினார்.

மன்றத்தின் செயலாளர் எம்.சுரேந்தர் நடைபெற்ற பணிகள் குறித்த அறிக்கையினை முன்வைத்துப் பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் எஸ்.மோகன்குமார், பழங்குடி மக்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகர், வழக்கறிஞர் செ.செயராசு ஆகியோர் மாநாட்டினை வாழ்த்திப் பேசினர்.

மாநாட்டில், 21 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக ஸ்டாலின் கௌதம், மாவட்டச் செயலாளராக கே.பிரபு, பொருளாளராக சிந்து, துனைத்தலைவர்களாக திலீப், அந்தியூர் பார்த்தசாரதி, துனைச் செயலாளர்களாக அருண், அரவிந்தன் ஆகியோரும் தேர்வு



தொடர்ச்சி 14ம் பக்கம்